இதழ் 347
12 யூலை 2025
19 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1



## செம்மணியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஒரு பார்வை

தாமோதரம் பிரதீவன் மனித உரிமை செயற்பாட்டாளர்,எழுத்தாளர்,அம்பாறை.




மருதன் ராம்





© 2025 இலக்கு இணையம்

# செம்மணி மனித புதைகுழி சம்பந்தமாக தமிழரசுக் கட்சி, ஜனாதிபதிக்கு கடிதம்

செம்மணி மனித புதைகுழி சம்பந்தமாக இலங்கை தமிழரசுக் கட்சி, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு வெள்ளிக்கிழமை (11) கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

செம்மணி புதைகுழியை, உண்மையை கண்டறிவதற்கும் சர்வதேசத்துடன் ஒத்துழைத்து நீதியை நிலைநாட்டுவதற்குமான தருணமாக அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று குறித்த கடிதத்தின் ஊடாக கோரப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்த இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், கிருஷாந்தி குமாரசுவாமியின் வழக்கில் முதலாவது குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ வழங்கிய வாக்குமூலத்துக்கு அமைய, மீட்கப்பட்ட என்புக் கூட்டுத் தொகுதிகளில் இரண்டு என்புக் கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



அந்த சந்தர்ப்பத்தில் 15 என்புக் கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டதுடன் அவை பரிசோதனைகளுக்காக லஸ்கோ பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப்பட்ட போதிலும் அதன் முடிவுகள் இது வரையிலும் வெளிப்படுத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதனுடன் தொடர்புடைய வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள நிலையில் அதனையும், தற்போது செம்மணி மனித புதைகுழி தொடர்பில் யாழ்ப்பாணம் நீதவான்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# காசாவில் தொடர் தாக்குதல்கள் பல இஸ்ரேலிய படையினர் பலி

வடக்கு காசாவில் உள்ள Beit Hanoun என்ற பகுதியில் ஹமாஸ் அமைப்பினர் திங்கட்கிழமை((7) மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் இஸ்ரேலின் கவச வாகனங்கள் சிக்கியதால் 20 படையினர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


பொறிவெடிகள் புதைக்கப்பட்ட இடத்திற்குள் சென்ற இஸ்ரேலிய படையினரின் வாகனத் தொடரணி கண்ணி வெடியில் சிக்கிய அதேசமயம் மறைந்திருந்த ஹமாஸ் படையினர் ஆயுதங்கள் ஏற்றிச் சென்ற வாகனத்தின் மீது உந்துகணை செலுத்திகளின் மூலம் தாக்குதல் மேற்கொண்டதில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.



சம்பவ இடத்திற்கு பயணம் செய்த இஸ்ரேலின் உலங்கு வானூர்திகள் காயமடைந்த மற்றும் கொல்லப்பட்ட படையினரை எடுத்துச் சென்றதை அவதானிக்க முடிந்துள்ளது. எனினும் இந்த தாக்குதலில் 5 இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டதாகவும் 10 பேர் காயமடைந்துள்ளதாகவும்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# ஒரு வாரத்தில் இரண்டு கப்பல்களை மூழ்கடித்த குதீஸ் அமைப்பினர்



லைபீரிய நாட்டு கொடியுடன் பயணித்த கிறீக் நாட்டில் பதிவு செய்யப்பட்ட MV Magic Seas என்ற கப்பலை ஏமன் Houthis அமைப்பினர்கடல்தாக்குதல்மூலம் தாக்கி மூழ்கடித்துள்ளனர். கடந்த 6 ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கப்பல் சேதமடைந்ததுடன், அதற்குள் நீர் புகுந்ததால் அதில் இருந்த பணியாளர்கள் வேறு ஒரு கப்பல் மூலம் மீட்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் கப்பல் முற்றாக கடலில் மூழ்கியுள்ளது.

ஏவுகணை மற்றும் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மூலம் முதலில் தாக்குதல் நடத்திய Houthis அமைப்பினர். பின்னர் சிறிய

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# காணி அபிவிருத்திகளூடாக நடைபெறும் தமிழர் விரோத செயல்

வவுனியா வடக்கு, வெடிவைத்தகல்லு எனும் பகுதியில் மகாவலி திட்டத்தின் கீழ் சுமார் 350 ஏக்கர் நிலம் தமிழ் மக்களிடமிருந்து பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.



மகாவலித்திட்டத்தின்மூலம் தமிழ் மக்களின் இனப் பரம்பலை சீர்குலைக்கும் செயற்பாடுகள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தது.

அந்த வகையில் வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரிவில் கொக்கச்சான்குளம் அபகரிக்கப்பட்டு கலாபோகஸ்வேவ என்னும் பெயரில் புதிய குடியேற்றம் மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் உருவாக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக, தற்போது வெடிவைத்தகல்லு கிராம அலுவலர் பிரிவில் உள்ள மற்றொரு கிராமமான திரிவைச்சகுளம் பகுதியில் சுமார் 350 ஏக்கர் நிலம்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# பாலஸ்தீனத்திற்கான ஐ.நா பிரதிநிதி மீது அமெரிக்கா தடை

பாலஸ்தீனத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி பிரன்செஸ்கா அல்பனீஸ் மீது அமெரிக்கா தடை விதித்துள்ளது. காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் பெருமளவான அப்பாவி மக்கள் கொல்லப்படுவது தொடர்பில் அவர் தொடர்ந்து குரல் கொடுத்து வருவதைத் தொடர்ந்தே இந்த தடை கொண்டு வரப்பட்டுள்ளது.

அல்பனீஸின் நடைவடிக்கைகள் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் அதிகாரிகள் மீதான அனைத்துலக நீதிமன்றத்தின் நடைவடிக்கைகளுக்கு வழிகோலியுள்ளது. அவர் தொடர்ந்து அரசியல் மற்றும் பொருளாதார போரை இஸ்ரேல்




தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இஸ்ரேலின் மொசாட்டை மடக்கிய ஈரான்

ஈரானிய ஹண்டாலா ஹேக்கர்கள் இஸ்ரேலிய ஆதரவு பெற்ற ஈரான் இன்டர்நேஷனல் பிரச்சார மையத்தை வெற்றிகரமாக ஹேக் செய்துள்ளனர். ஈரான் இன்டர்நேஷனலின் முக்கிய செய்தி பெறும் கணக்கு கையகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தகவல் தருபவர்கள், உளவாளிகள், துரோகிகள் மற்றும் வெளிநாட்டு முகவர்களுடன் தொடர்பு கொள்வதற்காக "பாதுகாப்பான வழி" என்று அழைக்கப்படும் இந்த சேனல், இப்போது ஹண்டாலாவின் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்த சேனலுடன் பகிரப்படும், உள்வரும் அனைத்து செய்திகள், இணைப்புகள், அறிக்கைகள், படங்கள் மற்றும் வீடியோக்கள் முழுமையாகப் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. உள்ளடக்கம் செயலாக்கப்பட்டு பல உளவுத்துறை மற்றும் அடையாள தரவுத்தளங்கள் இனங்காணப்பட்டு அவர்களின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நெட்வொர்க்கைத்



தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# ஈரானிய ஏவுகணைத் துண்டுடன் அமெரிக்கா சென்ற நெத்தன்யாகு

அண்மையில் அமெரிக்க சென்ற இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு ஈரானினால் ஏவப்பட்டு இஸ்ரேலில் வீழ்ந்த ஏவுகணையின் சிதறல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சிறிய B2 விமானத்தை தன்னுடன் எடுத்துச் சென்று அமெரிக்க அதிபர் Trumpபிடம் வழங்கியுள்ளார்.



Fordow பகுதியில் அமெரிக்கா மேற்கொண்ட குண்டுத் தாக்குதலின் பின்னர் ஈரான் மேற் கொண்ட பதில் தாக்குதல்களை அடுத்து போர் முடிவுக்கு வந்திருந்தது. இந்த நிலையில் ஈரான் மீது சிரியா மற்றும் குர்திஸ் படையினரை கொண்டு தாக்குதல்களை மேற்கொள்ளும் அடுத்த திட்டமாக சிரியா

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# நவாலி படுகொலை: 30 ஆவது ஆண்டு நினைவில்



கடந்த 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ஆம் திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த தமிழ் மக்கள் மீது இலங்கை அரச விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் பலியாகினர். இந்த சம்பவம் நடைபெற்று 30 வருடம் ஆகிவிட்டது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் ஆட்சி காலத்தில் தமிழர் தாயகப் பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது பொது மக்கள் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் தஞ்சமடைந்து இருந்தார்கள். அப்போதே இத்தாக்குதல் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது ஒரு அப்பட்டமான தமிழ் இனப் படுகொலையாக இருந்த போதிலும் இதுவரையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த தீர்வும் கிடைக்காமல், ஒவ்வொரு வருடமும் அஞ்சலி நிகழ்வுடன் இச் சம்பவம் கடந்துகொண்டிருகின்றது.

# செம்மணி புதைகுழியும் அம்மணியின் ஆட்சியும்!



இன்றுவரை (12-07-2025) செம்மணியில் 65,தமிழரின் எலும்புக்கூடுகள் கண்டெடுப்பு.

1994, நவம்பர்,12 தொடக்கம் 2005, நவம்பர்,19 வரை11 வருடங்களாக ஜனாதிபதியாக பதவியில் இருந்தவர் சமாதானப்புறா என அழைக்கப்பட்ட சந்திரிக்கா குமாரதுங்க அவர் காலத்தில் இடம்பெற்ற இனப்படுகொலை விபரம்:

1. 1995 யூலை 09, நவாலி தேவாலய படுகொலை-131 தமிழர்கள்.
2. 1995 செப்டம்பர் 22 நாகர்கோயில் பாடாசாலை படுகொலை-137 தமிழர்கள்.
3. 1996 செம்மணிப்படுகொலை-140 தமிழர்கள்.
4. 1996 பெப்ரவரி 11 குமரபுரம் படுகொலை -143 தமிழர்கள்.
5. 1996 மார்ச்16 நாச்சிக்குடா படுகொலை-146, தமிழர்கள்.
6. 1996 மே 17 யாழ் தம்பிராஜ் சந்தை குண்டுவீச்சு-148 தமிழர்கள்.
7. 1996 யூலை 24-மல்லாவி படுகொலை -150 தமிழர்கள்.
8. 1996 செப்டம்பர் 07 கைதடி கிருஷாந்தி உட்பட தமிழினப்படுகொலை -151 தமிழர்கள்.
9. 1996 செப்டம்பர், 1997 ஆகஷ்ட் 15 இரண்டு தினங்கள் வவுனிக்குளம் படுகொலை -160, தமிழர்கள்
10. 1996 செப்டம்பர் 27 கோணாவில் குண்டு வீச்சு

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

## ஈழத்தமிழர்கள் ‘தந்திரோபாய நடுநிலைமை’ மூலம் தங்கள் இறைமையைக் காக்க வேண்டிய காலம்

கடந்த வாரத்தில் அமெரிக்க அரசுத் தலைவர் ட்ரம்ப் சிறிலங்காவுக்கு 30 வீத இறக்குமதி வரியினை விதித்து அனுப்பிய கடிதத்தில், சிறிலங்கா அசாதாரண நட்பு நாடு என்று குறிப்பிட்டுள்ளார். அதே வேளை மலேசியாவில் நடைபெற்ற ஆசியான் எனப்படும் தென்கிழக்காசியாவின் கூட்டிணைவு மாநாட்டில் ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சர் செர்கே லவ்ரோ சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் உரையாடுகையில் "சிறிலங்கா ரஸ்யாவின் நம்பத்தகுந்த பங்காளி நாடு எனவும் பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்குச் சிறிலங்கா கடந்த அக்டோபரில் அனுப்பிய விண்ணப்பத்திற்கு நன்றி தெரிவிப்பதாகவும் அந்நகர்வு வரவேற்கத்தக்கதெனவும், அதற்கு ரஸ்யா முழுமையான ஆதரவை அளிக்கும்" என்றும் உறுதிப்படுத்தியுள்ளார்.

சிறிலங்காவின் மொத்த அதிகாரபூர்வமான டொலர் இருப்பு இன்று 600 கோடி டொலர்கள் என்ற நிலையில் இதில் ஒருபகுதி சீன விதிமுறைகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் டொலர் இருப்புப் பயன்பாட்டுக்கான நிவாரணமாக இந்தியா 100 கோடி டொலர்களை அதில் 80 கோடி டொலர்களுக்கு மேல் மானியங்களாகவே கொடுத்துள்ளது. அதே வேளை பிரித்தானியா வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் கீழ் வளர்ச்சிக்கான வர்த்தகம் என்ற சிறப்புரிமையினை சிறிலங்காவுக்கும் வழங்கியுள்ளதால் சிறிலங்காவின் ஆடையுற்பத்தி போன்ற துறைகளுக்கான உள்ளீடுகளை சுதந்திரமாகப் பெறவும் உற்பத்தியினை வரிவிலக்குடன் பிரித்தானியாவில் சந்தைப்படுத்தவும் கூடிய பல வசதிகளைச் சிறிலங்கா பெற்றுள்ளது. இவைகளை எல்லாம் பார்க்கும் பொழுது அமெரிக்காவின் சிறிலங்காவுக்கான 30 வீத வரியினைக் கூட ஆகஸ்ட் முதலாம் திகதிக்குள் சிறிலங்கா அமெரிக்காவின் வளர்ச்சிக்கான வேறு சலுகைகளை உறுதிப்படுத்தி மேலும் குறைப்பதற்கான சாத்தியக் கூறுகள் கூட சிறீலங்காவுக்கு இன்னமும் உண்டு என்பதையும் உணரவைக்கிறது.

அமெரிக்க சீன இந்திய பிரித்தானியாவின் கடந்தவார சிறிலங்கா குறித்த செயற்பாடுகள் சிறிலங்கா இன்றைய உலகின் அமெரிக்காவின் வர்த்தகப் போருக்கும் தொழில்நுட்பப் போருக்கும் தனது எல்லா நாடுகளுடனுமான ‘ தந்திரோபாய நடுநிலை’ மூலம் எதிர்கொள்ளும் என்கிற நம்பிக்கையை அளிக்கிறது. சிங்களவர்களின் இறைமையைப் பாதுகாக்க 1948 முதலே சிங்கள அரசாங்கங்கள் தொடர்ச்சியாக இந்த "தந்திரோபாய நடுநிலை" போக்கை கடந்த 77 ஆண்டுகளாகவே தெளிவாகக் கையாண்டு வருகின்றனர். ஆனால் ஈழத்தமிழர்களின் அரசியல்வாதிகள் உலக அரசியல் முறைமையுள் பக்கசார்பான நிலையினையே அன்றும் இன்றும் தொடர்ந்து எடுத்து வருவதாலேயே ஈழத்தமிழர்களின் இறைமையுள்ள தாயகத்தில் அவர்களின் தேசியத்தை முன்னிலைப்படுத்தி தங்களின் பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சிகளையும் ஈழத்தமிழர்களால் உறுதிப்படுத்த இயலாதுள்ளது. தந்திரோபாய நடுநிலை என்பது உணர்ச்சி அரசியல் விருப்பு வெறுப்பு அரசியலைக் கடந்து சமகாலத்தில் உள்ள உலக அரசியல் முறைமைகளின் அரசியல் பொருளாதார எதார்த்தத்தைக் கருத்தில் கொண்டு சமகாலப் பிரச்சினைகளுக்கு தங்களின் இறைமையைத் தேசியத்தை இழக்காது உரையாடல்கள் பங்காண்மைகள் கூட்டாண்மைகள் வழி ஏற்புடைய தீர்வுகளை உருவாக்குவது.

உதாரணமாக சிறிலங்காவின் இன்றைய ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தியினரின் மூலவர்கள் 1965 இல் ரஸ்ய சீன சார்பான சிங்கள இடதுசாரி இயக்கமாகவே கருக்கொண்டவர்கள். அமெரிக்க எதிர்ப்பாளர்களாகவே உலகிற்கு அறியப்பட்டவர்கள். சிங்கள ஆட்சியாளர்களால் பயங்கரவாதிகளாகவே பிரகனடப்படுத்தப்பட்டவர்கள். பயங்கர வாதத்தடைச்சட்டத்தின் கொடுமைகளை அனுபவித்தவர்கள். 1970 இல் இந்தியப்படைகளின் நேரடியான நெறிப்படுத்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில் படைகளால் முதலிலும் பின்னர் மேற்குலக ஆதரவுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் பிரேமதாசாவின் ஆட்சியில் அடுத்தும் தங்கள் போராளிகளைப் பல்லாயிரக்கணக்கில் இழந்த வரலாறு உடையவர்கள்.

வலிந்து காணாமால் ஆக்கப்பட்டோரால் நிறைந்தவர்கள். ஆயினும் அந்த வலிகளையும் வேதனைகளையும் பிரிவுகளையும் இழப்புகளையும் மீளவும் மீளவும் நினைந்து செயற்பாடின்றி சோர்ந்து ஒடுங்கிப் போகாது ‘தந்திரோபாய நடுநிலை’ யினை அரசியலாக்கியே இன்று அதே சிறிலங்காவின் ஆட்சியாளராக மட்டுமல்ல தம்மை ஒடுக்கிய பிராந்திய மேலாண்மைகள் வல்லாண்மைகள் தமக்கே உதவி செய்ய வைக்கும் ஆட்சியாளர்களாகவும் சிறிலங்காவில் விளங்குகின்றார்கள் என்பது ‘தந்திரோபாய நடுநிலை’ அரசியல் செயற்பாட்டின் சமகாலச் சான்றாக விளங்குகின்றார்கள். இதனால் தேசிய மக்கள் சக்தி தனது வரலாற்றின் நினைவை மறந்தவர்களாகவோ அதற்கான தண்டனை நீதியை மறந்து விட்டவர்களாகவோ இல்லை. தம்மைப்பலப்படுத்தி எதற்காகத் தமது போராளிகள் உயிரிழந்தார்களோ ஊனமடைந்தார்களோ வாழ்விழந்தார்களோ அதனை சமகாலத்தின் ஒப்புரவுடன் நடைமுறைப்படுத்த முயன்று கொண்டிருக்கின்றார்கள் என்பதே உண்மை.

ஆனால் 1972இல் சிங்கள பௌத்த சிறிலங்கா குடியரசின் பின்னர் அனைத்துச் சிங்களவர்களுமே அவர்கள் வலதுசாரிகளாக இருந்தாலென்ன இடதுசாரிகளாக இருந்தாலென்ன ஈழத்தமிழர்களின் இறைமையை இனஅழிப்பு அரசியலால் ஒடுக்கி அவர்களின் நிலத்தை படைபலத்தால் ஆக்கிரமித்து தங்களின் சிங்கள கண்டி கோட்டே அரசுகளின் எல்லைகளைக் கடந்து ஈழத்தமிழரின் யாழ்ப்பாண - வன்னி அரசுக்களின் எல்லைகளை சிங்கள ஆட்சிக்குள் உட்படுத்தும் நோக்கும் போக்கும் உடைய அரசியலையே இலங்கைத் தீவில் படைபலம் கொண்டும் அரசபயங்கரவாதம் கொண்டும் செய்து வருகின்றனர். இதற்கு இவர்கள் மட்டுமல்ல என்றும் எந்தச் சிங்கள அரசுக்களும் கூட விதிவிலக்காக மாட்டாது. இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் அனைத்து உலகிலும் ‘தந்திரோபாய நடுநிலைமை’ யைப் பின்பற்றி உலக நாடுகளுடனும் உலக அமைப்புக்களுடனும் தங்களது இறைமையைப் பாதுகாப்பதற்கான சனநாயக வழியிலான அனைத்து செயற்பாடுகளையும் உடன் தொடங்க வேண்டுமென்பதே இலக்கின் இவ்வார அழைப்பாக உள்ளது.

பிரித்தானிய அரசர் பிரான்சிய அரசத்தலைவரை அரசவிருந்தினராக அழைத்து பிரதமர் உட்பட அமைச்சர்கள் உடன் நடைபெற்ற சந்திப்புக்களும் இந்த ‘தந்திரோபாய நடுநிலை’ பால் பட்டதாகவே அமைகிறது. பிரித்தானியாவுக்கும் பிரான்சிற்கும் இடையில் எல்லைகளற்ற உறவு என்பது அறிவிக்கப்பட்டது. இதே பிரித்தானியாவும் பிரான்சும் எத்தகைய வரலாற்றுப் பகைமைகளை வெளிப்படுத்தின என்பது எல்லாம் அனைவருக்கும் தெரியும். ஆயினும் அவற்றை யெல்லாம் கடந்து இருக்கின்ற வேறுபாடுகளுக்கு நடுவிலும் சமகாலத்தில் பாதுகாப்பான அமைதிக்கும் வளர்ச்சிக்கும் தந்திரோபாய நடுநிலை காலத்தின் தேவையாகிறது என்பதற்கு இது உலக உதாரணமாக உள்ளது. அதே வேளை பிரான்சின் எந்த முடிவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் ஏற்கப்பட வேண்டிய நிலை பிரித்தானியா பிரிக்சிட் மூலம் வெளியே வந்ததால் உள்ளது என்ற எதார்த்தமும் பேசப்பட்டதைக் காணலாம். ஆகவே இந்த சில உதாரணங்களை மனதிருத்தி ஈழத்தமிழர்கள் தந்திரோபாய நடுநிலையில் தங்களை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டுமென்பது இலக்கின் எண்ணம். ஏனெனில் இன்று அமெரிக்க அரசத் தலைவர் "மிரட்டுதல் வழி பணிய வைத்தல் இல்லையேல் தாக்குதல் வழி தளரவைத்தல்" என்கின்ற தந்திரோபாயத்தை உலக அரசியலில் தோற்றுவித்து அனைத்து உலக அரசியல் முறைமையை செயலிழக்க வைத்துள்ள நிலையில் ஈழத்தமிழ் மக்கள் போன்ற சிறுதேச இனங்களின் இறைமையைப் பாதுகாத்தல் என்பது மக்களே இணையும் செயற்பாடுகள் மூலமே நடைமுறைச் சாத்தியமாக உள்ளது.

இந்நிலையில் சமகாலத்தில் செம்மணியில் சிந்துபாத்தியில் தகனமேடை அமைக்க முயன்ற பொழுது தொடங்கி சிறிலங்காவின் மனிதப் புதைகுழிகளில் இருந்து வெளியாகத் தொடங்கிய மனித எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை 65 ஐ தாண்டிய நிலையில் இது குறித்த அனைத்துலக விசாரணை மூலமே இதற்கான நீதியைப் பெற முடியுமென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிறிலங்கா நடாளுமன்றத்தில் ஆற்றிய உரை மிக முக்கியமானதாக அமைகிறது. அதே வேளை கட்சி பேதங்களைக் கடந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் ஈழத்தமிழர்களின் பொது கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முயற்சியாக அனைத்து ஈழத்தமிழ் அரசியல்வாதிகளையும் சந்திக்கும் திகதி குறித்த பயணத்தைத் தொடங்க இருப்பதும் முக்கியமாக காலத்தின் தேவையாக உள்ளது.

அதே நேரம் ஈழத்தமிழர்களும் "அனைத்துலக நீதி விசாரணையைக் கோருகின்றனர்" என்பதை உலகுக்கு வெளிப்படுத்தவும் ஐக்கிய நாடுகளின் செப்டெம்பர் மாத மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் அனைத்துலக நீதி விசாரணைக்கான முன்னெடுப்புக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்றும் கோரி அனைத்து ஈழத்தமிழ் மக்களையும் யூலை 26ம் நாளில் மக்கள் போராட்டத்தில் ஒன்றிணையுமாறு வடக்கு-கிழக்கு சமூக அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான கண்டுமணி லவகுசராசா அழைப்பு விடுத்துள்ளார். இன்னும் 15 நாட்களே உள்ள நிலையில் இந்த ஈழத்தமிழ்மக்களின் போராட்டம் தாயகத்திலும் அனைத்துலகிலும் ஈழமக்களின் பெருங்குரலாக அமைய ஈழத்தமிழ் மக்கள் தேசமாக எழுவதற்கான ஆயத்தங்களை இப்போதிருந்தே செய்ய வேண்டும் என்பது இலக்கின் இவ்வார அழைப்பாக உள்ளது.

**ஆசிரியர்**

# செம்மணி இனவழிப்புக்கான ஆதாரம்

# அருத்து என்ன?



விதுரன்

செம்மணி மனித புதைகுழியிலிருந்து இது வரையில் 65 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் அதன் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு, எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மீண்டும் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தாண்டின் கடந்த பெப்பரவரி மாதம் 18ஆம் திகதியன்று அவசர நிர்மாணிப்பு பணிகளை முன் னெடுத்த போது முதற்தடவையாக எலும்புக் கூடுகள் இருப்பது அடையாளம் காணப் பட்டது. அந்த நாளில் இருந்து செம்மணி சித்துப்பாத்தி பகுதியில் தொடர்ச்சியாக அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

முதலாம் கட்டத்தில் ஒன்பது நாட்கள் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இரண்டாம் கட்டத்தில் 15நாட்கள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதில் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இலக்கம் - 01' மனித புதைகுழியில் இருந்து 63 எலும்பு கூடுகளும் , 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இலக்கம் – 02' மனித புதைகுழியில் இருந்து இரண்டு எலும்பு கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை 'தடயவியல் அகழ்வாய்வுத் தளம் இலக்கம் – 02' புதைகுழியில் குழப்பகரமான முறையில் மனித எலும்பு சிதிலங்கள் காணப் படுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த இரு புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட, பை, காலணிகள், கண்ணாடி வளையல்கள், ஆடையை ஒத்த துணிகள், பொம்மை உள்ளிட்ட பொருட்கள் சான்று பொருட்களாக அடையாளப்படுத்தப்பட்டு, நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆனந்தராஜா, மேற்பார்வையில் பேராசிரியர் ராஜ் சோமதேவ அகழ்வுப்பணிகளை முன்னெடுத்திருந்ததோடு யாழ்.போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி பிரதாபனும் எலும்புக்கூடுகள் மீட்டு மன்றும் பாதுகாத்தல் செயற்பாடுகளில் கணிசமான வகிபாகத்தினைக் கொண்டிருக்கின்றார்.

அதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழி சம்பந்தமான வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த வழக்கில் நீதிமன்றின் நிலைப்பாடு மிக முக்கியமானதாக உள்ளது.

ஏனென்றால், தற்போதைய நிலையில், செம்மணி மனிதப் புதைகுழி சம்பந்த மான பல்வேறு தரப்பட்ட பார்வைகள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. மனிதப்புதைகுழியை மலிப்படுத்து வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அவ்வாறான பின்னணியில், செம்மணி மனிதப்புதைகுழி சம்பந்தமாக நீதிமன்றம் தனது நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தும் பட்சத்தில் அடுத்தகட்டச் செயற்பாடுகளுக்கு பேருதவியாக இருக்கும்.

விசேடமாக, ஆட்சிப்பீடத்தில் உள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செம்மணி விடயத்தில் நழுவல் போக்கையே கடைப்பிடிக்கின்றது.

அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவும், நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்காரவும் அகழ்வுப்பணிகளுக்கு அரசாங்கம் முழுமையாக ஒத்துழைக்கும் என்றும், நீதிமன்ற வழக்கு காணப்படுவதால் நீதித்துறையே அவ்விடயத்தின் அடுத்தகட்டம் சம்பந்தமாக தீர்மானிக்கும் என்று கூறி நழுவிக் கொள்கின்றார்கள்.

அகழ்வுப்பணிகளை தொடர்ச்சியாகவும், துரிதமாகவும் முன்கொண்டு செல்வதற்கு நிதி ஒதுக்கீடு உட்பட இதர வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் என்ற வகையில் முன்னெடுப்பதற்கு தயாராக இல்லை.

வங்குரோத்தான பொருளாதார நிலைமைகளைக் கொண்ட நாட்டில் ஆட்சியில் உள்ள அரசாங்கத்தினால் செம்மணி மனிதப் புதைகுழி உட்பட நாட்டில் காணப்படும் எந்தவொரு மனித புதைகுழியையும் முழுமையாக அகழ்வாராய்ச்சி செய்வதற்கான இயலுமை இருக்காது என்பது யதார்த்தமானது.

ஆனால், அரசாங்கம் என்ற அடிப்படையில் இத்தகைய மனித புதைகுழிகளை அகழ்வாரய்ச்சி செய்து உண்மைகளைக் கண்டறியச் செய்வதற்கும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் காணப்படுகின்ற அர்ப்பணிப்பு முக்கியமானது.

அத்தகைய அர்ப்பணிப்பு காணப்படுமாக இருந்தால், அரசாங்கம் இருதரப்பு, பல்தரப்பு ஒத்துழைப்புக்கள் ஊடாக சர்வதேச நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அரசாங்கம் அந்த விடயத்தில் ஆர்வம் காண்பிக்காதுள்ளது.

இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. சர்வதேச நாடுகளிடத்தில் ஒத்துழைப்புக்களை கோருகின்றபோது, அந்நாடுகள் சர்வதேச தரங்களை உறுதி செய்து அகழ்வாராய்ச்சிகளை முன்னெடுப்பதற்கு அழுத்தங்களை அளிக்கலாம். உண்மைகளை கண்டறிந்து பொறுப்புக்கூறுவதற்கு வலியுறுத்தலாம்.

அவ்வாறு செய்கின்றபோது, உள்நாட்டில், படையினருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிலைமைகள் நிச்சயமாக உருவாகும். அவ்வாறு உருவாகின்றபோது படையினரும், தென்னிலங்கை சிங்கள மக்களும் ஆட்சியாளர்களுக்கு எதிராக திரண்டெழுந்து விடுவார்களோ என்ற அச்சம் காணப்படுகின்றது. இனமொன்று திட்டமிட்டு கொன்று குவிக்கப்பட்டு புதைக்கப்பட்டிருந்தாலும், அதுபற்றி உண்மைகளை கண்டறிந்து, பொறுப் புக்கூறு வதற்கு அரசாங்கம் தயாரில்லாத நிலையில் தனது வாக்குவங்கியை பாதுகாப்பதற்கு முயற்சிக்கும் மூன்றாந்தர நிலைமையே கடந்த கால அர சாங்கங்களின் காலத்திலும் காணப் பட்டது. அதேநிலைமையே தற்போதும் தொடருகிறது.

1998 ஆம் ஆண்டு கிருசாந்தி குமாரசாமி படுகொலை கொலை வழக்கில் குற்றம்சாட்டப் பட்டு, மரணதண் டனை விதிக்கப்பட்ட, லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, இராணுவத்தினரால் கொன்று புதைக்கப்பட்ட சுமார் 300 பேர் புதைக்கப்பட்ட இடங்கள் தனக்குத் தெரியும் என்று கூறியிருந்தார்.

அவர் கூறியபடி அகழ்வுப் பணிகள் முறையாக முன்னெடுக்கப்பட்டிருந்தால், கூடுதலான தடயங்களுடன், எலும்புக்கூடுகளைக் கண்டறிவதற்கான வாய்ப்புகள் இருந்தன.

ஆனால், அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட வில்லை. ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் அதற்கான ஆர்வத்தைக் காண்பிக்காது, எவ்வாறு மூடி மறைக்கலாம் என்றே சிந்தித்தன.

அக்காலத்தில் காணப்பட்ட போர்ச்சூழல் பொதுமக்கள் வீதியிலிறங்கிப் போராடுவதற்கு இடமளித்திருக்கவில்லை. தற்போதைய 'அணையா விளக்கு' போராட்டம் போன்ற கவனயீர்ப்பு பற்றி சிந்திப்பதற்கு கிஞ்சித்தும் இடமளித்திருக்கவில்லை.

ஆனால் தற்போதைய சூழல் மாறுபட்டது. செம்மணி சித்துப்பாத்தி பகுதியில், எங்கு தோண்டினாலும் சடலங்கள் அல்லது மனித எச்சங்கள் அல்லது மனித பாவனைப் பொருட்கள் தென்படுகின்ற அளவுக்கு ஒரு மோசமான நிலைமையே காணப்படுகின்றது.

குறித்த மனிதப் புதைகுழியில் இருந்து, தொடர்ச்சியாக மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்படுகின்ற நிலையில், இந்த புதைகுழி பற்றிய உண்மைகள் வெளிப்படுமா என்ற அச்சம் கூடவே மேலெழவும் ஆரம்பித்துள்ளது.

ஏனென்றால் அரசாங்கத்தின் பிற்போக்குத்தனமான நிலைமை முதற்காரணமாக உள்ளது. அடுத்ததாக, பாதிக்கப்பட்ட தமிழ்த் தரப்புக்குள் காணப்படுகின்ற போட்டிகளும், மாறுபட்ட நிலைமைகளும் வலுவான கோரிக்கைகளை நீர்த்துப்போகச் செய்யும் துர்ப்பாக்கிய நிலைமைகளை தோற்றுவிக்கின்றன.

ஆகவே பாதிக்கப்பட்ட தரப்பான தமிழ்த் தரப்பு செம்மணி மனித புதைகுழி விடயத்தில் தாமதமின்றி தீர்க்கமான முக்கிய சில விடயங்களை கையாள வேண்டியது அவசியமாகின்றது.

அதில் முதலாவது, 1999 இல் அகழப்பட்ட கிருசாந்தி குமாரசுவாமி உள்ளிட்ட 15 உடல் எச்சங்களும், தற்போது அகழப்பட்டுக் கொண்டிருக்கும் எலும்புக்கூடுகளும் ஒரே குற்றவியல் சூழலுடன் தொடர்புபட்டவை என்ற அடிப்படையில் கொழும்பு நீதிவான்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# செம்மணியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஒரு பார்வை

செம்மணி மனிதப் புதைக்குழி அடையாளம் காணப்பட்ட பிரதேசத்தில் இடம்பெற்று வரும் அகழ்வுப் பணிகளின் முதல் கட்ட அகழ்வுப் பணிகள் 9 வது நாளின் பின்னர் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் 26-05-2025 காலை 8 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் இரண் டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் முதல் நாள் அகழ்வுப் பணியின் போது ஒரு குழந்தையின் அல்லது சிறுவரின் மண்டையோடு உள்ளிட்ட சிதைவடைந்த எலும்பு கூட்டுத் தொகுதியோடு இன்னும் இருவரது எலும்புக் கூட்டுத் தொகுதிகள் உள்ளடங்கலாக மூன்று எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்த நிலை யில், இந்த இரண்டாம் கட்ட பணிகள் ஆரம்பமாகி முதல் கண்டுபிடிக்கப்பட்ட சிறுவருடையது என சந்தேகிக்கப்பட்ட என்புக்கூட்டுத் தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டு ஏனைய இரண்டும் அடுத்து நாட்க ளில் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்த நிலையில் அகழ்வுப் பணிகள் தொடர்ந்தன.



இதேவேளை இவ்வாறு இரண்டாம் கட்ட அகழ்வின்போது முதல் நாளில் கண்டு பிடிக்கப்பட்ட சிறுவரின் எலும்புத் தொகுதி தொடர்பிலும் இங்கு தொடர்ந்தும் வெளிவரும் உறவுகளின் எலும்புக்கூடுகள் தொடர்பிலும், ஆடைகள்,பாடசாலைப் புத்தகப் பை. காலணி,வளையல்கள்,பொம்மைகள் என்பன தொடர்பிலும் தமிழர்கள் மத்தியில் பெரும் கவலையும்,சோகமும் ஏற்பட்டிருந்தது. இந்நிலை யில் இவ்விடயம் பல சமூக ஆர்வலர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களினதும் மனி தாபிமானம் கொண்டவர்களினதும் பார்வையினை யும் அங்கு திருப்பியதோடு, தொடர்ந்த அகழ்வுப் பணிகள் தொடர்பில் உள்நாட்டு வெளிநாட்டு ஊகங்களினதும், ஊடகவியலாளர்களினதும் கவ னத்தைத் திருப்பி இவ்விவகாரம் பெருமளவில் பேசுபொருளாக மாறியது.

இந்த அகழ்வுப் பணிகளானது யாழ் நீதி மன்றத்தின் *BR 433 PC 2025* எனும் வழக்கிற்கு அமைவாக கௌரவ.நீதிபதி திரு.ஏ.ஏ. ஆனந்தராஜா அவர்களின் கட்டளைக்கு அமைவாக அவரது மேற்பார்வையுடன் தொல்லியல் துறை பேராசிரி யர் திரு.ராஜ் சோமதேவா அவர்களுடைய தலை மையில் அவர்களின் குழுவினர், தொல்லியல்துறை மாணவர்கள், மற்றும் டாக்டர் பிரணவன் செல்லையா மற்றும் பல சட்ட வைத்திய அதிகாரிகள், சட்டத்தரணிகள் போலீசார், யாழ் பல்கலைக்கழக வைத்திய பீட மாணவர்கள் சோகோ (Sogo) போலீசார் (seen of crime officers ) யாழ் குற்றத் தடுப்பு பொலீஸ் பிரிவினர் என பலரது பிரசன்னத்துடனும் கண்காணிப்புடனும் இந்த அகழ்வுப் பணிகள் தொடர்ந்தன.

**தாமோதரம் பிரதீவன்**
மனித உரிமை செயற்பாட்டாளர்,
எழுத்தாளர்,அம்பாறை.

இந்த அகழ்வுப் பணிகள் பாதிக்கப்பட்ட தரப்பு அல்லது முறைப்பாட்டாளர்கள் சார்பாக சொல்லப்பட்ட பிரதேசங்களில் இரு பிரிவுகளாக Site 01 Site 02 என வகைப்படுத்தப்பட்டு இந்த அகழ்வு பணிகள் நடந்திருந்தது.



மனிதப் பேரவலத்தின் அடையாளமாகக் காணப்படுகின்ற செம்மணி சிந்துபாத்தி மயான மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகளின் போது தொடர்ந்தும் பல உறவுகளுடைய எலும்புக் கூட்டுத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருந்தன, அவற்றில் பல குழந்தைகள், சிறுவர்களுடையதும், தாயும் பிள்ளையுமாகவும், குடும்பமாகவும் ஈவு இரக்கமற்றுக் கொன்று கொத்துக் கொத்தாகப் புதைக்கப்பட்டிருக்கலாம் எனும் பலத்த சந்தேகத்தின் வெளிப்பாடாகவே பலரது எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அங்கே கண் டெடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

அந்த இடத்தில் இடம்பெறுகின்ற அகழ்வு பணிகளின் அடிப்படையில் பார்க்கிறபோது இங்கு மீட்கப்படுகின்ற இந்த எலும்புக்கூட்டுத் தொகுதிகள் உரிய முறைப்படி அடக்கம் செய் யப்படாதது போன்றும் அவசர அவசரமாகப் புதைக்கப்பட்டது போன்றுமே காணப்படுகிறது, இந்த எலும்புக்கூட்டுத் தொகுதிகள் ஒவ்வொன்றும் சுமார் ஒரு அடி அல்லது ஒன்றரை அடி அளவு ஆழத்திலே இருந்து தான் அகழ்வுப் பணிகளில் மீட்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.




எனவே இவைகளைப் பார்க்கின்றபோது இங்கு நிச்சயமாக ஒரு மனிதப் பேரவலம் இடம்பெற்றிருக்கிறது எனும் சந்தேகத்தை வலுக் கச் செய்கிறது.

தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற அகழ்வுப் பணிகளின் போது கிடைக்கின்ற எமது உறவுகளின் எலும்புக் கூட்டுத் தொகுதிகள் ஒவ்வொன்றும் மிகவும் பாதுகாப்பாகவும், நுட்பமாகவும் அகழ்ந்து முழுமையாக வெளியில் எடுக்கப்பட்டு அவைகள் நீதிமன்றக் கட்டு காவ லில் வைக்கப்படுவதோடு அங்கு கிடைக்கப் பெறுகின்ற ஏனைய சான்றுப் பொருட்களும் மிகவும் பாதுகாப்பாகவும், நுட்பமாகவும் அகழப் பட்டு நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்படுகி றது.

இதேவேளை தொடர்ந்தும் இடம்பெற்று

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# செம்மணி மனித புதை குழி: உள் நாட்டு விசாரணையில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை



**யாழ்ப்பாணம் செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. மேலும் எதிர்வரும் 21ஆம் திகதி அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரையில் 65 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், இலங்கையின் மூத்த சட்டவாளர் கே.எஸ். ரட்ணவேல் அவர்கள் இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய சிறப்பு கருத்து.**

## பகுதி 1

### செம்மணி படுகொலைக்கான நீதியை பெற தமிழர்களிடம் உள்ள தெரிவுகள் என்ன?

இலங்கையில் தமிழ் மக்களுக்கான நீதி காலம் காலமாக மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. 1958 ஆம் ஆண்டு கலவரம் தொடக்கம் 1977 க்குப் பிறகு 83ஆம் ஆண்டு கலவரங்கள் அனைத்திலும் அரசாங்க இயந்திரமே அதில் முன் நின்று தமிழ் மக்களுக்கு பலவிதமாக கலவரங்களை உருவாக்கி, தமிழ் மக்களுடைய உயிர்கள், சொத்துக்கள், ஆதனங்கள், வியாபாரங்கள் அனைத்தை யும் நாசமாக்கியது.

மேலும் தங்களுடைய பெரும்பான்மை இன அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக காலம் காலமாக அரசு இதை செய்துவருகிறது. இதுவரை அதற்கு எந்தவித வழக்குகளிலும் ஏதாவது செய்து அது சம்பந்தப்பட்டவர்களை அல்லது குற்றம் இழைத்த வர்களை வழக்கு தொடுத்து நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படவில்லை.

மிகச்சில வழக்குகள் போடப்பட்டன. இதில் பெரும்பான்மையான விடயங்களில் அரசாங்கம் இதற்கான எந்த நடவடிக்கையையும் முன்னின்று செய்யவில்லை. அதற்கு மாறாக அதில்ஈடுபட்டவர்கள் அரசியல் வாதிகள் மற்றும் காவல் துறையினர் பிரதானமாக இராணுவத்தினர் இவர்களை பாதுகாப்பதிலேயே தங்களுடைய கவனத்தை செலுத்தி வருகின்றனர்.

யுத்தத்தின் இறுதி பகுதியில் நடந்த இன அழிப்பு, இன சுத்திகரிப்பு யுத்த குற்றங்கள் இவை எல்லாமே நடக்கவில்லை அதற்கு இராணுவத்தினர் பொறுப்பல்ல. அதற்கு மாறாக ஒரு மனிதாபிமானமாக செயல்பட்டார்கள் என்று ஒரு பொய் கருத்தியலை உருவாக்கி வருகிறார்கள்.

எனவே இலங்கை அரசாங்கத்தையும் அரச இயந்திரத்தையும் நம்புவதற்கு தமிழ் மக்கள் தயாராகவில்லை. அத்தோடு அவர்கள் எப்பொழுதும் உள்நாட்டு பொறிமுறையில், உள்நாட்டு நீதிமன்ற விசாரணைகள் மற்றும் காவல்துறை விசாரணைகளில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார்கள்.

அதனால்தான் நடந்த எல்லா போர் குற்றங்கள் எல்லாவற்றிற்கும் தங்களுக்கு சர்வதேச பொறிமுறையின் மூலமான நியாயம் நீதி கிடைக்க வேண்டும் என்று அவர்கள் திட்டவட்டமாக கூறியிருக்கிறார்கள். காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்கள், கைதுசெய்யப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள் என பல வகையில் பாதிக்கப்பட்ட மக்கள் மிக தெளிவாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு முதலில் பொறுப்பு கூறுதல் வேண்டும், யார் இந்தக் குற்றங்களைச் செய்தது? அவர்களுக்கான தண்டனையை வழங்க வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்கள்.



எனவே இது ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர்களில் கூட இலங்கை அரசாங்கம் தங்களுடைய இராணுவ வீரர்களை விட்டு கொடுக்க தயாராகவில்லை. அவர்களுக்கு எதிராக எவ்வளவுதான்சாட்சியங்கள்இருந்தாலும்அதாவது இந்த போர் குற்றங்கள் மற்றும் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள்,வன்முறைகள் மற்றது அந்த பெண்களுக்கு எதிராக வன்புணர்வு அதாவது இதை யுத்தத்தில் ஒரு ஆயுதமாகவே பயன்படுத்தினார்கள்.



எனவே இது எல்லாவற்றுக்கும் சேர்ந்த ஒரு நீதி நியாயம் வேண்டும். அதற்காக எத்தனையோ தடயங்கள் எத்தனையோ சாட்சியங்கள் வெளி நாடுகளில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. அதன் காரணமாகத்தான் சமீபத்தில் கூட பிரித்தானிய அரசாங்கம் நான்கு இராணுவத்தினரை தடை செய்ய உத்தரவிட்டிருக்கிறது. அதுபோலவே அமெரிக்காவிலும் சில இலங்கை உயர் இராணுவ அதிகாரிகள் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் அனுமதிமறுக்கப் பட்டிருக்கிறது.

எனவேதான் தமிழ் மக்கள் எந்த விதத்திலும் இந்த உள்நாட்டு பொறிமுறையை நீதிமன்றங்களையோஉள்நாட்டுநீதிமுறையையோ நம்பத் தயாராக இல்லை.

அதற்கு மாறாக சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூறி நிற்கிறார்கள். சர்வதேச விசாரணை என்னும்போது அது எந்த விதத்தில் அதனை அணுகலாம் என்று பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன. இதுவரைக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்வதற்கும் இலங்கை அரசாங்கத்தை குற்றம் சாட்டப்படுவதற்கும் அதற்கான நியாயாதிக்கம் இல்லை. ஏனென்றால், இலங்கை அதில் ஒரு அங்கத்தினராக அல்லது அதற்கான சட்டத்திற்கு பூர்வாங்க ஒருபங்களிப்பு செலுத்தவில்லை. எனவே அந்த சட்டத்தை இலங்கைக்கு மேலாக பிரயோகிக்க முடியாது என்ற ஒரு கருத்து காணப்படுகிறது.

அப்படிப்பட்ட ஒரு விடயம் இருந்தாலும் ஐக்கிய நாடுகள் சபை மற்ற சர்வதேச சட்டங்கள் வேறு பல விடயங்களில் சிந்தித்து அதாவது கம்போடியா, சியரா லியோன் போன்ற நாடுகளில் ஏற்பட்டது போல் ஐ சிசி மூலமாக இல்லாது வேறு வழிவகைகளை கையாளலாம் என்ற கருத்து பலமாக நிலவுகிறது.

எனவே இது ஒரு கால ஓட்டத்தில் இது மிக பலமாக மிக காத்திரமாக சிந்தித்து செயலாற்ற வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சட்டங்கள் சார்ந்த நிறுவனங்கள் இந்த விடயத்தை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி இன்னமும் ஆலோசனை நடத்திக் கொண்டுதான் இருக்கின்றார்கள். எனவே நாங்கள் உள்நாட்டில் செய்கின்ற இந்த செயல்முறையை செய்து கொண்டுதான் இருக்கிறோம்.

அதற்கான சர்வதேச பொறிமுறையில் இதை எப்படி சேர்த்து கொள்ளலாம் எப்படி அணுக வைக்கலாம் என்ற அந்த நோக்கில் உள்நாட்டில் நடக்கின்ற இந்த செம்மணி அகழ்வு போன்ற விடயங்கள் மற்றும் வழக்குகள் போன்ற பல விடயங்களும் முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

**தொடரும்....**

# இலங்கையின் சனத்தொகையில் ஈழத்தமிழர்களின் பிறப்பு வீதம் வீழ்ச்சி.!

பா. அரியநேத்திரன்

உலக மக்கள் தொகை தினம், ஆண்டுதோறும் யூலை 11ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. அந்தவகையில் நேற்று (11/07/2025) உலகமக்கள் தொகைதினத்தைஒட்டிஇந்தகட்டுரைஅமைகிறது. இந்த நாளில், உலக மக்கள் தொகை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், மக்கள் தொகை பெருக்கம் மற்றும் அதன் விளைவுகள் பற்றிய விவாதங்களை ஊக்குவிப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும்.



இத்தினம் ஐக்கிய நாடுகள் சபையால் 1989 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகிறது. மக்கள் தொகை அதிகரிப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள், குறிப்பாக சுகாதாரம், கல்வி, வறுமை, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரம் தொடர்பான பிரச்சினைகள் இந்த நாளில் விவாதிக்கப்படுகின்றன.

சிறிய குடும்பங்கள் மற்றும் மக்கள் தொகை கட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த நாள் உதவுகிறது. மேலும், இந்த நாளில், மக்கள் தொகை தொடர்பான புள்ளிவிபரங்கள், ஆய்வுகள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்படுகின்றன.

இலங்கையில் குறிப்பாக வடகிழக்கில் 2024, யூலை,11 ல் எவ்வாறாக சனத்தொகை அதிலும் தமிழ் மக்களின் நிலை எவ்வாறு பின்னோக்கி சென்றுள்ளது என்பதை நாம் உணரவேண்டும்.

இலங்கையின் குடிசன தொகைமதிப்பு 2024 அறிக்கை கடந்த (07/04/2025) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

2012ல்,இலங்கையின் சனத்தொகை இரண்டு கோடியே 40 இலட்சமாக குறிப்பிடப்பட்டது, தற்போது 12 வருடங்கள் கடந்து 2024ல் எடுக்கப்பட்ட சனத்தொகை புள்ளிவிரம் ஒப்பிடுகையில் சனத்தொகை 14,03731 அதிகரித்து காணப்படுகிறது. 2024 இலங்கையின் மொத்த சனத் தொகை 21,763,170 ஆகும். அதாவது, இரண்டு கோடியே 17 இலட்சத்து 63 ஆயிரத்து 170 ஆகும்.

15 வது தேசிய சனத் தொகை கணக்கெடுப்பு 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கி 2025ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இரண்டாவது வாரம் நிறைவுசெய்யப்பட்டது. அதில் இன ரீதியாக, மத ரீதியான விபரம் வெளிவரவில்லை.

மொத்த சனத்தொகை புள்ளி விபரத்தை நோக்குகையில் வடக்கு கிழக்கு தாயக தமிழ் மக்களின் தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

முழுமையாக இன ரீதியாக புள்ளிவிபரம் வெளியிடும்போது இது அறியலாம். 2024 ல் மொத்த சனத்தொகையில்.

**கிழக்கு மாகாணம்:**

1. மட்டக்களப்பு-595453 பேர்.
2. அம்பாறை-744150 பேர்
3. திருகோணமலை-442465 பேர்

**வடமாகாணம்:**

1. யாழ்ப்பாணம்-594333 பேர்
2. கிளிநொச்சி- 136434 பேர்
3. முல்லைத்தீவு-122542 பேர்
4. வவுனியா- 172257பேர்
5. மன்னார்- 123674 பேர்

வடக்கு கிழக்கில் சனத்தொகை கூடியமாவட்டமாக அம்பாறையும் குறைந்த சனத்தொகையுள்ள மாவட்டமாக முல்லைத்தீவையும் பார்க்க முடிகிறது.

வடக்கு மாகாணம் இலங்கையில் குறைந்தளவான சனத்தொகையை கொண்ட மாகாணமாக உள்ளது.(இலங்கையிலும் குறைந்த சனத்தொகை கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு தொடர்ந்தும் உள்ளது)

2012 சனத்தொகை கணிப்பீட்டுடன் வட கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களையும் 2024, கணிப்பீட்டுடன் ஒப்பீடு செய்தால் எனது ஆய்வில் யாழ்மாவட்டத்திலும், வவுனியாமாவட்டத்திலும் சந்தேகம் எழுந்தது.

**வடமாகாணத்தில்..**

- **2012ல் யாழ்பாணம் 583882 தொகை 2024ல் 594333 பேர் கூடியுள்ளனர் மேலதிகமாக 10451, பேர் மட்டுமே கூடியுள்ளனர்.**
- **2012ல் கிளிநொச்சி 113510 தொகை 2024ல் 136434, பேர் கூடியுள்ளனர் மேலதிகமாக 22924, பேர் கூடியுள்ளனர்.**
- **2012ல் மன்னார் 99570 தொகை 2024ல் 123674, பேர் கூடியுள்ளனர் மேலதிகமாக 24104 பேர் கூடியுள்ளனர்.**
- **2012ல் முல்லைத்தீவு 92238, தொகை 2024ல் 122542 பேர் கூடியுள்ளனர் மேலதிகமாக 30304 பேர் கூடியுள்ளனர்.**
- **2012ல் வவுனியா 172115, தொகை 2024 ல் 172257, பேர் கூடியுள்ளனர், மேலதிகமாக 142, பேர் மட்டுமே கூடியுள்ளனர்.**

மொத்தமாக வடமாகாணத்தில் 2012, ல் 1061315, சனத்தொகையானது 2024, ல் 1149239, ஆக அதிகரித்தாலும் மேலதிகமாக 87925, மக்கள் தொகை மட்டுமே கூடியுள்ளது.

**கிழக்கு மாகாணத்தில்..**

- **2012 ல் மட்டக்களப்பு 526567, தொகை 2024ல் 595453 மேலதிகமாக 68886, பேர் கூடியுள்ளனர்.**
- **2012ல் அம்பாறை 649402, தொகை 2024ல் 744150 மேலதிகமாக 94748 பேர் கூடியுள்ளனர்.**
- **2012ல் திருகோணமலை 379541 தொகை 2024ல் 442465 மேலதிகமாக 62924, பேர் கூடியுள்ளனர்.**

மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் 2012, ல் 1555510, சனத்தொகையானது 2024, ல் 1782065, ஆக அதிகரித்துள்ளது மேலதிகமாக 226544, மக்கள் தொகை மட்டுமே கூடியுள்ளது.(இதில் தமிழர்களை விட இஷ்லாமிய மக்களே அதிகளவில் உள்ளதாகவே அமையலாம்)

ஆச்சரியம் என்ன வெனில்..

2012, சனத்தொகை கணிப்பீட்டுக்கு பின்னர் 2024, தற்போது 12, வருடங்களில் பின்னர் யாழ்மாவட்டத்திலும், வவுனியாமாவட்டத்திலும் ஏன் இவ்வாறு சடுதியாக மக்கள் தொகை குறைந்தனர் என்பதை ஆராயப்பட வேண்டும்.

அதிலும் வவுனியா மாவட்டத்தில் 142, பேர் மட்டுமே 12, வருடங்களில் கூடியுள்ளனர் கணிப்பீட்டில் தவறா அல்லது அந்த இரண்டு மாவட்டங்களில் அதிகளவான மக்கள் நாட்டை விட்டுச்சென்றனரா? வேறு மாவட்டங்களில் குடிய மர்த்தப்பட்டனரா? அல்லது பிறப்பு வீதம் குறைந் ததா? இதனை மீளவும் சமூக ஆர்வலர்கள் கணக்கில் கொள்வது அவசியம் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

இனம் இல்லாத நிலத்தால் எந்த முன்னேற்றமும் இல்லை நிலத்தை பாதுகாக்க இனம் முக்கியமானது.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஆரம்பத்தில் 1977, ல் 10, பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தது.

பின்னர் 8, 7, 6, என பிரதிநித்துவம் குறைந்து வந்துள்ளது. இறுதியாக 2024, பொதுத் தேர்தலில் 6, பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே யாழ்மாவட்ட தேர்தல் மாவட்டத்தில் கிளிநொச்சியையும் உள்ளடங்கலாக தற்போது உள்ளனர்.



இது எதிர்வரும் 2030, ம் ஆண்டு பொதுத் தேர்தலில் 5, பாராளுமன்ற உறுப்பினர்களாக மாறும் அபாயம் உள்ளது.

இதேபோல் கிழக்கு மாகாணத்தில் மொத்த சனத்தொகையில் இன ரீதியிலான கணக்கெடுப்பு புள்ளிவிபரப்பட்டியல் வந்த பின்னர் முதல் இடத்தை முஷ்லிம் மக்கள் , இரண்டாம் இடம் தமிழர்கள் என்ற கணிப்பு நிச்சயம் வரும்.

அதில் அம்பாறை மாவட்டத்தில் முஷ்லிம் மக்களின் சனத்தொகை பாரிய அதிகரிப்பை காட்டும். அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2012, கணிப்பீட்டில் தமிழர்கள் 72.61,வீதமாகவும், முஷ்லிம் மக்கள் 25.49, வீதமாகவும், சிங்களவர்,1.17,வீதமாகவும் சனத் தொகை இருந்தது.

தற்போதைய 2024, புள்ளிவிபரம் முழுமையாக வெளியிடப்பட்ட பின்னர் அவதானித்தால் நான் நினைக்கிறேன் மட்டக்களப்பில் தமிழர் 68, தொடக்கம் 70, வீதத்திற்கு குறையக்கூடிய நிலை வரலாமோ தெரியாது. அடுத்த 12, வருடத்திற்கு பின்னர் அதாவது 2036, ம் ஆண்டு கணக்கெடுக்கும்போது கிழக்கில் தமிழர்களின் விகிதாசாரம் மூன்றாவது நிலையில் வரக்கூடிய அபாயம் உள்ளது தொடர்ந்து தமிழர்களின் பிறப்பு வீதம் குறையுமானால் இது நடக்கும், நிலங்களைக்கூட தக்கவைக்கமுடியாமல் இழக்கும் நிலை ஏற்படலாம்.

வடமாகாணத்தில் சனத்தொகை புள்ளி விபரம் இப்படி தமிழர்கள் குறைவாக இருக்கும் நிலையில் வடமாகாண கல்வி அமைச்சு வெளியிட்ட இன்னும் ஒரு தகவல் பேரதிர்ச்சியை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

கட்டுரை

# அபகரித்த முத்து நகர் விவசாய காணியைப் பெற போராடும் விவசாயிகள்



கிண்ணியான்

வடக்கு கிழக்கில் மக்களின் தனியார் காணிகளை நில அபகரிப்பு செய்வது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தின் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள முத்து நகர் விவசாயிகளின் விவசாய காணி இலங்கை துறை முக அதிகார சபையால் கையகப்படுத்தப்பட்டு இந்திய நிறுவனம் ஒன்றுக்கு நீண்ட கால குத்தகைக்காக சோலர் பவர் திட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் சுமார் 800 ஏக்கர் விவசாய செய்கை பண்ணக்கூடிய காணியை அபகரித்துள்ளதால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

1972ம் ஆண்டுக்கு முன்னர் அப்பகுதியில் உள்ள மக்கள் விவசாய மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளுக்காக பயன்படுத்தி வந்தனர். குறித்த விவசாய பகுதியில் 53 வருடங்களாக தங்களது ஜீவனோபாய தொழிலாக நெற் செய்கை நிலங்களாக அங்குள்ள மூன்று குளங்களை நம்பி விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இங்கு முத்து நகர் கமக்காரரர் அமைப்பு, தகரவெட்டுவான் ,மத்தியவெளி என மூன்று கமக்கார அமைப்புக்கள் காணப்படுகின்றது அண்ணளவாக 45 ஏக்கர் அளவில் சிறுபோக பெரும் போக அறுவடை கூட இடம் பெற்றுள்ளது. இருந்த போதிலும் 2022ல் வாரிசௌபாக்கிய திட்டத்தின் கீழ் தகரவெட்டுவான் குள புனர் நிர்மாணத்துக்காக ஒரு கோடிக்கு மேல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் இதனை துறை முக அதிகார சபையினர் தடுத்து நிறுத்தினர். 1984ல் துறை முக அதிகார சபைக்கு சொந்தமான காணியாக லலித் அதுலத் முதலியால் வர்த்தமானி அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது ஆனால் தற்போது சுமார் 352 விவசாய குடும்பங்களும் இதன் மூலமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் குறித்து அப்பகுதியின் விவசாய சம்மேளனத் தலைவியான திருமதி சஹீலா தெரிவிக்கையில் " துறை முக அதிகார சபையின் காணி என்று கூறி எங்களை வெளியேற்றி இந்திய நிறுவனத்துக்காக சோளர் திட்டத்துக்காக வழங்கியுள்ளனர் இதனால் பெரும் பாதிப்படைந்துள்ளோம். போராடினால் எங்களை கைது செய்வோம் என பொலிஸார் அச்சுறுத்தினர் ஏற்கனவே விவசாய சம்மேளனங்களின் மூவரை கைது செய்துள்ளனர் தற்போதைய அரசாங்கமும் எங்களை ஏமாற்றியுள்ளதுடன் அன்றாட தொழிலாக இதனை நம்பியே வாழ்ந்து வருகின்றோம்.



விவசாயத்தை தவிர எங்களுக்கு வேறு தொழில் எதுவும் தெரியாது 1984 க்கு முன்னர் துறை முகஅதிகாரசபையினர் என்ன செய்தனர் இப்போது அதானி நிறுவனத்தின் கிளை நிறுவனத்துக்கு எங்கள் காணிகளைப் பிரித்து வழங்கியுள்ளனர். அப்போதைய வர்த்தமானியானது அமைச்சரவையின் அங்கீகாரமில்லாமல் லலித் அதுலத் முதலி சுய விருப்பில் வர்த்தமானி அறிவித்தலை செய்துள்ளார். எங்கள் விவசாய பூமியை மீட்க பல முறை போராட்டங்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து மஹஜர் வழங்கிய போதும் அவர்களும் இலங்கை துறை முக அதிகார சபையினரும் இணைந்து கூறியதாவது வேறு எந்த கம்பனிகளுக்கும் வழங்க மாட்டோம். முன்னைய அரசாங்கம் தான் கம்பனிகளுக்கு வழங்கியிருந்தது என்றுகூறிவிட்டு இப்போதையஆட்சியாளர்களால் தாரை வார்த்து விட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வழங்கியுள்ளனர். இப்போது மிகவும் தீவிரமாக விவசாய காணிகளை இயந்திரம் மூலமாக அழித்து தள்ளி நாசமாக்கும் பணியில். ஈடுபட்டுள்ளனர் எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும்" எனவும் தெரிவித்தார்.



இது விடயமாக சாதகமான தீர்வொன்றை பெற்று தருவது தொடர்பாக காணி அபகரிப்புக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திர, ரொசான் அக்மீமன போன்றவர்கள் விஜயம் மேற்கொண்டு விவசாயிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி விட்டு வந்தனர். இதனை தொடர்ந்து ஓரிரு வாரங்களின் பின்னர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இலங்கை துறை முக அதிகார சபையினர் நுழைந்து காணி அளவீடுகளை மேற்கொண்ட நிலையில் தனியார் கம்பனிக்கு சோலர் பவர் திட்டத்துக்காக வழங்கியுள்ளனர்.

இது குறித்து அண்மையில் மக்கள் போராட்ட முண்ணியின் உயர் பீட உறுப்பினர் வசந்த முதலிகே அங்கு சென்று மக்களுக்கு சாதகமான பதிலை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் அவர்களது விவசாய பூமி வழங்கப்பட வேண்டும் எனவும் கூறினார்.

"காட்டுப் பகுதி இங்கு எவ்வளவோ காணப்படுகிறது. அதனை பெறுங்கள் விவசாய காணிகளை தாருங்கள். ரணில் அரசாங்கம் மூலமாக வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது



.இதனை ஆராய்ந்து ஒப்பந்தம் செய்து விற்பனை செய்துள்ளது. இதற்கான அனுமதியினை பிரதேச செயலகம், பிரதேச சபை வழங்கியுள்ளது எனவே அபகரிப்பை நிறுத்தி எங்கள் விவசாய பூமிகளை தாருங்கள் என விவசாயியான வயோதிபர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் கிண்ணியா விஜயத்தின் போது அங்கு சென்று மஹஜரை வழங்க முற்பட்ட போதும் பாரிய பாதுகாப்புடன் வீதி மறியல் வைத்து தடுத்தனர். பின்னர் அங்குள்ள அமைப்பாளர் ராபிக் இடம் வழங்கினோம். அவர் அனுப்பினாரோ என்ன செய்தாரோ தெரியவில்லை. தீர்வில்லாமல் தற்போது தத்தளிக்கிறோம். இவ்வாறான நிலையில் கடந்த அரசாங்கத்தில் எதிர்க்கட்சியில் இருக்கும் போது இந்திய திட்டத்துக்காகவும் சம்பூர் அனல் மின் திட்டத்துக்காக போராடியவர்களே இப்போது எமது மாவட்டத்தில் ஆளுங் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்,பிரதியமைச்சராக உள்ளனர். இவர்கள் தங்களை ஏமாற்றியுள்ளதாகவும் தகரவெட்டுவான் விவசாய சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார்.



முஸ்லீம்களின் காணிகளை இவ்வாறு குறி வைத்து அபகரித்து கொடுப்பது அநுர அரசாங்கம் மீது சந்தேகம் எழுகின்றது. இனவாதம் மதவாதம் இல்லை என்று பேசிய ஜனாதிபதி எங்கே இப்பகுதியை அண்மித்த அம்மன் குள விவசாயிகளுக்காக பசளை உறுதியை வைத்து வழங்கப்படுவதாக அப்பகுதி கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலாளரும் கூறுகின்ற போது எங்களை மாத்திரம் புறக்கணிப்பது ஏன்?

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# அரசுகளுடனான உறவுகளும், ஈழத் தமிழர் போராட்டமும்

## பகுதி 1

மு. திருநாவுக்கரசு

அரசற்ற ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமானது, அடிப்படையில் உள்நாட்டு தன்மைவாய்ந்ததாயினும், போராட்டத்திற்கான கட்டுமானமானது பெரிதும் வெளிநாட்டு பரிமாணங்களை கொண்டது.

மிகச் சரியான, துல்லியமான வெளிநாட்டு பார்வையின்றி, சர்வ தேசப் பார்வையின்றி மேற் படி வகையிலான ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டத்தை வெற்றிக்குரியதாக்குவது சாத்தியமில்லை.

இந்த வகையில் அடிப்படையிலுமாக அரசு, வெளிநாடு, சர்வ தேசம் பற்றிய ஒரு கணிப்பீடு போராடும் ஈழத்தமிழர் மத்தியில் சரிவர அமைய வேண்டும்.

பொதுவாக தமிழீழப் போராட்டத்தை முன்னெடுக்கும் பல்வேறு சக்திகள்மத்தியிலும் அதற்கான கணிப்பீடு மிகவும் பல வீனமாக உள்ளது.

ஈழத்தமிழர் மத்தியில் புராண, இதிகாச, காப்பிய கலாச்சாரங்களின் பின்னணியினால் தூய்மைவாதமும், கற்பனாவாதக் கருத்தோட்டமும், சிந்தனைப்போக்கும் மேலோங்கியுள்ளன.

யதார்த்தத்திற்குப் புறம்பான, நடைமுறைக் கொவ்வாத இத்தகைய கருத்துமண்டலத்துள் சிக்குண்டு, இரத்தமும் தசையுமான நவீன சர்வதேச அரசியலை மனவேகக் கற்பனைகளினால் தலையிற் தூக்கி, காலிற் போட்டுடைக்கும் ஒரு பரிதாபகரமான போக்கை தமிழரசியல் கொண்டுள்ளது.

அந்த வகையில், அரசு, வெளிநாடு, சர்வ தேசம், சர்வதேச அரசுகள் அல்லது வெளிநாட்டு அரசுகள் என்பன பற்றிய ஓர் அறிவார்ந்த கணிப்பீட்டைச் செய்யும் முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

ஐநா சபைக்கான அங்கத்துவ அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட 196 முழு அரசுகள் இந்த பூமியில் உள்ளன.

தனக்கென சொந்த அரசமைத்து, அரசுடன் கூடிய தேசிய விடுதலைக்காக போராடும் அரசு அற்ற ஈழத்தமிழ் தேசிய இனம், மேற்படி அரசுகள் நிறைந்த இந்த உலகில், அவ்வாறு காணப்படும் அரசுகளை கையாளும் வித்தையை சரிவர கையிலெடுக்க வேண்டும்.

அதற்கும் முன் நிபந்தனையாக அரசுகள் பற்றிய அடிப்படை இயல்பை, அதற்குரிய செயல்பாட்டை, அதற்கான யதார்த்தத்தை சரிவர எடைபோட்டு, அதற்கேற்ப அவற்றை கையாள வேண்டும்.

அரசை, முடியரசு, மக்கள்அரசு, அந்நியஅரசு, இனஆதிக்கஅரசு, தன்னினஅரசு, 21ஆம் நூற்றாண்டுக்குரிய பூகோள வளர்ச்சிக்குட்பட்ட அரசு என, அவை அவர்களுக்கு உரிய பரிமாண வேறுபாடுகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

அதேவேளை, "அரசு" என்ற நிறுவனத்திற்கு இருக்கக்கூடிய பொதுஇயல்பை அடிப்படையாகக் கொண்டு, அரசநடத்தைகளையும் அவை மேற்கொள்ளும் அரசுகளுக்கிடையேயான உறவுகளையும் சீர்தூக்கி அணுகவும், கையாளவும் வேண்டும்.

இவற்றை யதார்த்தபூர்வமான, நடைமுறை சாத்தியத்திற்குரிய, விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைக்குப் பின்பற்றியே அணுக வேண்டும்.

விருப்பங்களினாலோ, இலட்சிய வேட்கைகளினாலோ, தூய எண்ணங்களினாலோ அணுகமுற்பட்டால், அழிவுகளை தான் தலையில் சுமக்க வேண்டி வரும்.

ஆதலால், முதலிலே இங்கு "அரசு" பற்றிய அதன் நிறுவனத் தன்மையை விருப்பு–வெறுப்புகளுக்கு இடமின்றி, நடைமுறை சார்ந்த வகையில்,



அதற்கே உரிய விஞ்ஞானபூர்வ அளவீட்டுடன் எடைபோடுவோம்.

ஒரு தேசிய இனப் பிரச்சினை என்பது எப்பொழுதும் ஒரு சர்வதேசப் பிரச்சினையாகும். எந்தவொரு தேசிய இனப் பிரச்சினையும் சர்வதேசக் கண் கொண்டே தான் பார்க்கப்பட வேண்டும்.

அதனை சர்வதேச பரிமாணங்களுக் கூடாகத்தான் அணுக வேண்டும். ஆதலால், தேசிய யுகத்தில் ஒரு தேசிய இனப் பிரச்சினை என்பது ஒருபோதும் வெறும் உள்நாட்டு பிரச்சினையல்ல; அது ஒரு சர்வதேச பரிமாணம் கொண்ட பிரச்சனையாகும்.

ஜெரிமி பென்தாம் *(Jeremy Bentham)* என்பவரால் எழுதப்பட்டு 1789 ஆம் ஆண்டு வெளியான *"An Introduction to the Principles of Morals and Legislation"* என்ற நூலில்தான் "சர்வதேசம்" — *"International"* என்ற பதம் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டது.

அதாவது, புவிப்பரப்பில் முதன்முறையாக தேசியப் புரட்சிகள் தோன்றியதையடுத்துதான் இப்பதம் பயன்பாட்டுக்கு வந்தது.

1776 ஆம் ஆண்டு அமெரிக்க விடுதலையும், 1789 ஆம் ஆண்டு பிரெஞ்சு புரட்சியும் நிகழ்த்திய பின்னணியில், தேசிய அரசுகள் உருவாகவே, தேசங்களுக்கிடையேயான உறவுகள் என்ற அர்த்தத்தில் "சர்வதேசம்" என்ற பதம் உருவாக வேண்டிய வரலாற்றுத் தேவை ஏற்பட்டது.

அதாவது நாடுகளுக்கிடையேயான அல்லது அரசுகளுக்கிடையேயான உறவுகள் என்பன புவிப்பரப்பில் அரசுகள் தோன்றியதை உடனடுத்த காலத்திலேயே ( சுமாராக கிமு 2500 ஆண்டுகளை ஒட்டி) தோன்றியுள்ளன. ஆனால் சர்வதேச உறவுகள் என்பது கிபி 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தேசிய அரசுகள் தோன்றியதைத் தொடர்ந்தே தோன்றின.

ஆனால் நடைமுறையில் தேசங்களுக்கிடையேயான உறவுகள் என்று சொல்வதை விடவும், அரசுகளுக்கிடையேயான உறவுகளாகவே அவை மேலோங்கியுள்ளன. தேசியம், சர்வதேசம் என்பன அரச கட்டமைப்பின் மீது கட்டி எழுப்பப்பட்டுள்ளதால் அரசவாதமே பலம் பொருந்தியதாயுள்ளது.

அரசு" என்பது அதிகார மையத்தை குறிக்கும். இத்தகைய அதிகார மையங்கள் நீர்வாழ், நிலம் வாழ்ப் பிராணிகள், மனிதப் பிராணி, பறவைகள் வரை ஏதோ ஒரு வகையில் ஆங்காங்கே உள்ளன.

உதாரணமாக யானைக் கூட்டத்திற்கு முன் மாதிரி யானை அல்லது தலைவி யானை *(The matriarch)*, என்ற பெண் தலைமைத்துவமுண்டு. சிங்கக் கூட்டத்திற்கு மேலாண்மை ஆண் சிங்கம் *(The dominant male)* என்ற ஆண் தலைமைத்துவமுண்டு. சிம்பாஞ்சி ( *chimpanzee*) கூட்டத்திற்கு *The Alpha male* என்ற ஆண் தலைமைத்துவமுண்டு. அப்படியே குரங்குக் கூட்டத்திற்கும் *The Alpha male* என்ற ஆண் தலைமைத்துவம் உண்டு. கடல்வாழ் உயிரினங்களில் ஆர்காஸ் திமிங்கிலத்திற்கு *(Orcas -Killer Whales) matriarch* என்று அழைக்கப்படும் மூத்த பெண் திமிங்கலத்தின் பெண் தலைமைத்துவ முண்டு.

அவ்வாறே பறவைகளில் வானில் பறக்கும் பறவைக் கூட்டங்களுக்கு நிரந்தரமற்ற ஆனால் அவ்வப்போது பறக்கும்போது வழிகாட்டுகின்ற, உணவை அடையாளம் காண்கின்ற கூட்டுத் தலைமைத்துவம் இருக்கும். இத்தலைமைத்துவம் அவ்வப்போதைய திறமையின், வல்லமையின், ஆளுமையின் அடிப்படையில் அமையும். இப்படியே வான்கோழி, கோழி என்பனவற்றின் மத்தியிலும் தலைமைத்துவம் உண்டு.

இந்த வகையில் அரசு என்பது பொதுவான உயிர் வாழ்தலில் மிகக் குறிப்பாக மனித வாழ்வில் வாழ்வை ஒழுங்குபடுத்துவதில் வளங்களைத் திரட்டுவதில் முகாமைத்துவங்களை மேற்கொள்வதில் இயற்கை மற்றும் அனர்த்தங்களில் மனித ஆதிக்கங்களிலிருந்து பாதுகாப்பதற்கு அரசு என்ற நிறுவனம் வரலாற்றில் எப்போதும் இன்றியமையாததாய் இருக்கிறது . அதற்காக அரசு என்பது ஒரு தூய்மையான, புனிதமான, மகிமைக்குரிய நிறுவனமல்ல. அரசு என்ற நிறுவனத்தின் இன்றியமையாமையை ஒருபுறமும் அது புனிதமானதல்ல என்பதை மறுபுறமுமென ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகப் புரிந்து கொள்வதிலிருந்து அரசை அணுக வேண்டும்.

அரசானது அதிகாரத்தை உயிர் மூச்சாகக் கொண்டது. அது தன் அதிகாரத்தால் ஒன்றை அணைத்தும் பெறவல்லது அல்லது அடித்தும் பெறவல்லது கூடவே ஒன்றை அழித்தும் பெறவல்லது. பெறுதல் மட்டுமே இலட்சியம் ஒன்றைப் பெறுதலே குறிக்கோள். அதன் நலன் அல்லது தேவையே அதன் இலக்கு. அதில் மகிமை, தூய்மை என்ற எதுவும் இருக்காது. தன் தேவையை அடைவதற்கான வழிவகைகள் எதுவோ, அதுவே அதற்கு நியாயம். அது கூறும் நியாயமும், நீதியும் அதற்குரிய நலம் சார்ந்த பக்கத்திலிருந்தே இருந்தே எழும்.

சிங்கம், புலி என்பனவற்றிற்கு மாமிசம் தேவை. அந்த இலக்கை அடைவதற்கான வழிவகைகள் நடைமுறையில் அதற்குப் புனிதமானவை.

இவ்வகையில் அரசானது தனது தேவைக்காக எத்தகைய அநியாயங்களையும், புனிதப் பிரசங்கங்களினாலும், புனித வார்த்தைகளினாலும்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்



# மலையக மக்களின் வாழ்வியலுடன் இணைந்த கூத்துகள்

மருதன் ராம்

மலையக மக்கள் தென்னிந்தியாவிலிருந்து கூலி வேலைக்காக அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் கடந்துள்ளன. 'இந்திய வம்சாவளித் தமிழர்கள்' என்ற பெயரில் ஆரம்பித்த இந்தப் பயணம் 'மலையகத் தமிழர்' எனும் தேசிய அடையாளமாக இவர்களை முன்னிலைப்படுத்தும் அரசியற் பாதைக்கு வழி செய்திருக்கிறது. இந்த இடைப்பட்ட காலப் பகுதியில் அந்த மக்களின் வாழ்வியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான மாற்றங்கள் மிக எளிதில் கிடைத்தவையல்ல.

இந்த இடைப்பட்ட காலத்து அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் வீழ்ச்சிகளும் உண்டு; எழுச்சிகளும் உண்டு. அவ்வாறான மாற்றங்கள் அந்த மக்களின் கலை, கலாசாரம், பண்பாடு, சமூக – பொருளாதார நிலை, அரசியல் போன்ற விடயங்களில் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட பெருந்தோட்ட மலையகத் தமிழர்கள், தனித்துவமான வரலாற்றையும், ஆழ்ந்த பண்பாட்டு மரபுகளையும் கொண்டவர்கள் என்ற வரலாறுகள் உள்ளன.



தேயிலைத் தோட்டங்களுடன் பிணைந்துள்ள மலையக மக்களின் வாழ்க்கை, கலை வடிவங்களில் ஆழமாகப் பதிந்துள்ளது. அவர்களது உழைப்பும், போராட்டங்களும், வாழ்வியலும் தனித்துவமான கலை வெளிப்பாடுகளைச் செதுக்கியுள்ளன. இவை வெறும் பொழுதுபோக்கு அம்சங்களாக இல்லாமல், அவர்களின் சமூக, சமய, உளவியல் தேவைகளுக்கான காலத்தின் சாட்சியாகவும் திகழ்கின்றன. 19ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் இருந்து பெருந்தோட்ட மக்கள் அழைத்து வரப்பட்டனர். அவர்களது கல்வி புறக்கணிக்கப்பட்டிருந்ததோடு தங்களுக்கான பாடசாலைகளை தாங்களாகவே உருவாக்கிக் கொள்ள வேண்டிய நிலைக்கு அந்த மக்கள் தள்ளப்பட்டனர். எனவே, அந்த மக்களுக்காக கூத்துப் பாடசாலைகள் இயங்கின. அங்கு அந்த மக்களுக்கான கூத்துகள் பயிற்றப்பட்டன.

மலையகமக்களின்கலைவெளிப்பாடுகள், அவர்களின் சமய நம்பிக்கைகளுடன் பிரிக்க முடியாத வகையில் இணைந்துள்ளன. கிராமிய தெய்வ வழிபாடுகள், பல்வேறு சடங்குகள், கலை நிகழ்வுகள் சங்கமிக்கும் களங்களாக கூத்துகள் அமைகின்றன. இசை, நடனம், மற்றும் கதைகூறல் ஆகியவை இந்த வழிபாடுகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த கலை வடிவங்கள், மலையக மக்களின் அடையாளத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கின்றன.



மலையகத் தமிழ் மக்களின் கலை வெளிப்பாடுகளில், கூத்துக் கலைகள் தனித்துவமானதொரு இடத்தைப் பெறுகின்றன. மலையகக் கூத்துகள் பெரும்பாலும் நாட்டுப்புற மரபுகளுடன் பின்னிப்பிணைந்தவை. இவை எழுதப்பட்ட வடிவங்களை விட, வாய்மொழி மரபாகவும், குருகுல வழியிலும் பேணப்பட்டு வருகின்றன. தோட்டப்புறங்களில் வாழும் மக்கள் மத்தியில், குறிப்பாக இரவு நேரங்களில், கடின உழைப்புக்குப் பின்னர் நிகழ்த்தப்படும் இக்கூத்துக்கள், சோர்வைப் போக்கி, ஒருவித மன அமைதியை வழங்கும் சடங்குப்பூர்வமான நிகழ்வுகளாகும். இவை புராண இதிகாசக் கதைகள், மற்றும் சில சமயங்களில் சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றன. இசை, நடனம், ஒப்பனை, வசனம் மற்றும் பாடல்கள் என்பன இந்தக் கூத்துகளின் ஒருங்கிணைந்த கூறுகளாகும்.

மலையகத்தில் நிகழ்த்தப்படும் கூத்துகளில் காமன் கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் போன்ற கூத்துகள் முக்கியமானவையாகும். இரவு தொடங்கிவிட்டால் தொழிலாளர் வாழும் லயன் குடியிருப்புகளில் உள்ள ஏதாவது ஒரு அறையில் ஒருவர் மகாபாரதம், நல்ல தங்காள் கதையை ராகத்துடன் வாசிக்க மற்றவர்கள் சூழ்ந்திருந்து இரசிக்கும் வழக்கம் கடந்த காலங்களில் காணப்பட்டன.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் காணப்பட்ட அடக்கு முறைகளுடன் உழைப்புக்கேற்ற ஊதியமின்மையால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்த தொழிலாளர்களுக்கு மன ஆறுதலையும் மகிழ்வையும் வாழ்க்கையில் நம்பிக்கையையும் அளித்தவை இந்த கலைகளாகும். தொழிலாளர்கள் தம் முன்னோரிடமிருந்து பெற்றுக்கொண்ட விலைமதிக்க முடியாத பெரும் சொத்து இவையாகும்.

### அண்மைய போக்குகள்

பல வருடகால வரலாற்றைக் கொண்ட பெருந்தோட்ட மக்களின் கூத்துகள் இன்றும் அந்த மக்களின் வாழ்வியலுடன் நிலைத்து நிற்கின்றது. இந்த கூத்துகளுக்குள் நவீன தொழில்நுட்பங்களோஏனையகலையம்சங்களோ ஊடுருவ முடியாதிருப்பதுவும், மலையக பெருந்தோட்டத்துறை சமூக கட்டமைப்புமே இதற்கு காரணமாகும். இருந்தும் அண்மைக்கால போக்குகள் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்துகின்றன.



தற்போது ஊர் மக்கள் ஒன்று கூடி இவ்வாறான கூத்துகளை உரிய முறையில் நடத்தி முடிப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதற்கு பெருந்தோட்ட சமூக கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களும் ஒரு முக்கிய காரணமாக அமைகிறது.

நகரமயம், உலகமயம் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களாலும் மக்களின் பாதையும் மாற்றமடைந்து வருகிறது. இவ்வாறான நிலை, சமூக பண்பாட்டு வேர்களில் பாதிப்பை ஏற் படுத்தி வருகின்றன. இவற்றுக்கு புறம்பாக சமூக சீரழிவுகள், சினிமா, தொலைக்காட்சி மோகம்,

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஐக்கிய இராட்சியத்தில் Palestine Action அமைப்புக்கு தடை

# போர் வியாபாரிகளுக்கு எதிரான சனநாயகப் போராட்டம்



## ஐக்கிய இராட்சியத்தில் Palestine Action அமைப்புக்கு தடை ஏன்?

இஸ்ரேல் பாலஸ்தீன மக்களுடைய நிலப் பகுதியை தொடர்ந்து அபகரித்து வருகின்றது. இதற்கு எதிராக அம்மக்கள் நீண்ட காலமாக போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். இதில் பாலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டும், கொல்லப்பட்டும், நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போயும் உள்ளனர். இந்த செயற்பாடு தொடரும் நிலையில்,இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்தியதில் பலர் உயிரிழந்தனர். அதே நேரம் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை ஹமாஸ் பணயக்கைதிகளாக பிடித்து சென்றிருந்தனர். இந்த சூழலில் ஹமாஸுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் இஸ்ரேல் காஸா பகுதியை மனிதப் புதை குழியாக மாற்றி வருகின்றது. இதை யடுத்து உலகெங்கிலும் இஸ்ரேலுக்கு எதிராக போராட்டங்கள் நடந்துவருகின்றன. இந்த சூழலில், Palestine Action அமைப்பை பிரித்தானியா தடை செய்துள்ளது. இதையடுத்து பல மனித உரிமை அமைப்புக்கள் பல கலாச்சார அமைப்புகள் இந்த தடைக்குஎதிராக போராட்டங்கள் செய்து வருகின்றன. இந்த நிலையில், காதர் மாஸ்டர் ஐக்கிய இராட்சியத்தில் Palestine Action அமைப்பு தடை செய்யப்பட்டமை குறித்து கூறுகையில்...

இந்த Palestine Action அமைப்பு தடை செய்யப்பட்டமைக்கு எதிராக லண்டனிலே பல பகுதிகளிலே போராட்டங்கள் நடைபெற்றன. Palestine Action என்ற அமைப்புக்கு எதிராக கொண்டுவரப்பட்டிருக்கின்ற தடையானது ஜூன் 30 ஆம்திகதி ஹோம் செக்ரட்டரி கூப்பர் அவர்தான் இன்டீரியர் மினிஸ்டரும் ஒரு பில்லை அவசரமாக கொண்டு வந்தார். அதிலே (Palestine Action) அமைப்பை பிரதானப் படுத்திக்கொண்டு அதை பேசினாலும் அதை தனியாக முன்வைத்தால்அந்த மசோதா தோற்கடிக்கப்படும் என்பதற்காக ஒரு கபடத்தனமாக அவர் வேறு சில இரண்டு அமைப்புகளை கொண்டு வந்தார். அது எம். எம்.சி முனாக்ஸ் மேடகால்ட் (MMC :Munax Metacald) என்ற ஒரு வலது சாரி வெள்ளை இனவாத அமைப்பு. அடுத்தது ஆர் ஐ எம் ரஷ்யன் இம்பீரியல் மூவ்மென்ட்.( Russian Imperial Movement) இதையும் பின்னிணைப்பாக சேர்த்து கொண்டு இவர்களை தடை செய்ய வேண்டும் என்பதுதான் அவருடைய நோக்கமாக இருந்தது. இந்த இரு தடை செய்யப்பட வேண்டிய அமைப்புகளையும் கொண்டு வந்து அந்த மசோதாவைநிறைவேற்றினார். இது ஒரு கள்ளத்தனமாக நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா. வேடிக்கை என்னவென்றால், யூன் 30ஆம் திகதி கொண்டுவரப்பட்ட இந்த மசோதா, இரண்டாம் திகதி நிறைவேற்றப்பட்டது. அதாவது ஒரு 385 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாகவும் 26 பேர் மாத்திரமே எதிர்ப்பும் தெரிவித்திருக்கிறார்கள்.

உயிரோடைத்தமிழ் வானொலிக்கு B A காதர் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தரப்படுகின்றது. இந்த நேர்காணலை காணொளியில் முழுமையாக பார்வையிட YouTube இல் முழுமையாகப் பார்ப் பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.



இதில் ஒரு அதிர்ச்சிகரமான விஷயம் என்னவென்றால், எப்படி அந்த பாராளுமன்றத்தை திசை திருப்பி இவர்கள் கள்ளத்தனமாக இந்த வாக்கைப் பெற்றார்கள் என்பதுதான்.

தனியாக இந்த Palestine Action என்ற அமைப்புக்கு எதிராக மாத்திரம் அந்த மசோதா கொண்டுவரப்பட்டிருந்தால் அது தோற்கடிக்கப் பட்டிருக்கும்.அங்குஇருக்கின்றவர்களுக்குகொடுக் கப்பட்டது இந்த நாசி அமைப்புகளான மேற் குறிப்பிட்ட இரு அமைப்பையும் தடை செய்வதற் காககொண்டுவரப்படுகின்ற ஒரு மசோதா என்ற விம்பத்தை கொடுத்து இதனை நிறைவேற்றி இருக்கிறார்கள்.

எதற்காக இந்த Palestine Action-னுக்கு தடையை கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் செய்த அப்படி பாரதூரமான குற்றம் என்ன? இந்த மசோதாவை அவர்கள் Palestine Action - னுக்கு எதிராக கொண்டு வந்ததற்கு, அண்மையிலே பிரித்தானியாவின் மிகப்பெரிய ரோயல் ஏர்போர்ஸ் பேஸ் -சுக்குள் புகுந்த (Royal Air Force (RAF)) இரண்டு பேர் விமானத்திலே சிவப்பு நிறத்திலே பாலஸ்தீனுக்கு ஆதரவான வாசகங்களை வர்ணம் பூசினார்கள். அதை அவர்கள் தகர்க்கவில்லை. குண்டு வைக்கவில்லை. வர்ணம் பூசிவிட்டு வந்தார்கள். அது அவர்களுக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தியது. ஆனாலும் பிரித்தானியா சட்டத்தின் படி இது ஒரு சட்ட விரோதமான நடவடிக்கை கிடையாது.

அடுத்த ஒரு சம்பவம், எல்பிட் சிஸ்டம் யுகே (Elbit Systems UK Israeli Arms Company or Principal Supplier of Military hardware to the IDF) என்று இஸ்ரேலுக்கு ஆயுதம் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலை Bristol – என்ற இடத்தில் இருக்கிறது. அதற்கு முன்னால் நின்று ஒரு பெண்ணும் ஒரு இளைஞரும் அந்த வாசலை மறித்தார்கள்.

அந்த தொழிற்சாலைக்கு தங்களுடைய ஆட்சேபனையைத் தெரிவித்தார்கள். அதே நேரம் வேறு சில இடங்களில் போராட்டக்காரர்கள் போராட்டம் செய்தார்கள். இந்த சம்பவங்களோடு உலகம் முழுவதும் இன்று பிரபலமாக இருக்கின்ற XR – என்ற எக்ஸ்டின்ஷன் ரெபலியன் ( Extinction Rebellion) அமைப்புடைய செயல்பாடுகளை நீங்கள் ஒப்பிடலாம். அவர்கள் மிக தீவிரமான ஆனால் வெகுஜன போராட்டத்திலே இருக்கின்ற சுற்றாடல் ஆர்வலர்கள். இவர்கள் ராணியின் மாளிகைக்கு முன்னால் சென்று அந்த கேட்டை மறைத்து கொண்டு அங்கு ராணியுடைய கொடும்பாவியை ஊர்வலமாக கொண்டு சென்றார்கள். இப்படியான பல போராட்டங்களை செய்திருந்தார்கள்.

இப்படியான போராட்டங்கள் எல்லாம் இவர்களுடைய கண்ணை உறுத்தவில்லை. ஆனால் ஏன் பாலஸ்தீனியர்களுடைய போராட்டம் இவர்களுடைய கண்ணை உறுத்துகிறது. இங்கே பல கேள்விகள் வருகிறன. பாலஸ்தீனிய மக்களுக்கு அவர்களுடைய மண்ணிலே வாழ்கின்ற உரிமை இல்லை. அவர்கள் இன்று உணவுக்காக காத்துக்கிடக்கிறார்கள். அவர்களை இஸ்ரேல் சுட்டுக்கொல்கிறது. அந்த அநியாயத்தை கண்டிப்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

கட்டுரை



# அணுவணுவாகச் செயலிழக்கிறது

# அணுவாயுதப் போரைத் தவிர்த்த அந்த ஒப்பந்தம்.

தமிழில்: **ஜெயந்திரன்**

உலகில் குழப்பங்கள் ஏற்படும் காலங்களில், கடந்த காலத்துடன் ஒப்பிட்டுப்பார்ப்பது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. கடந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் மீண்டும் நடைபெறுமா? என ஆராய்வதற்கு கடந்த கால வடிவங்களை நாங்கள் உற்றுநோக்குகிறோம். இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து, ஈரானின் மேல் போரைத் தொடுத்த பொழுது, வரலாற்றில் இதற்கு முதல் நடைபெற்ற பல நிகழ்வுகளை பலரால் மீட்டுப்பார்க்காமல் இருக்க முடியவில்லை. கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்த உலகப் போர்கள், 2000 ஆண்டுகளில் ஈராக்கிய தேசம் அழிக்கப்பட்டது போன்ற வரலாறுகள் எம் கண் முன்னே விரிகின்றன. ஏற்கனவே நாம் சந்தித்த அனுபவங்கள் எங்களுக்குப் பல பாடங்களைக் கற்பிக்கின்றன. ஆனால் நிகழ்வுகள் மீண்டும் நிகழ்ந்தாலும், அவை அச்சொட்டாக அப்படியே முதலில் நடைபெற்ற விதத்தில் இருப்பதில்லை.

ஆனால் ஒவ்வொரு நாடும் எப்படிப்பட்ட வகையில் நடந்துகொள்கின்றது என்பதைச் சற்று ஆழமாக நோக்கும் போது, அங்கே பல விடயங்கள் மீண்டும் மீண்டும் அதே பாணியில் நடைபெறுவதை அவதானிக்கலாம். அப்படியிருந்தாலும் கூட முன்னுதாரணங்களில் மாற்றங்கள் ஏற்படத்தான் செய்கின்றன. நாம் ஏற்கனவே பெற்றுக்கொண்டிருக்கும் அறிவையும் கற்பனையையும் பயன்படுத்தினால், எதிர்காலத்தை எம்மால் எதிர்வுகூறக்கூடியதாக விருக்கும்.



சரியாக 50 வருடங்களுக்கு முன்னர், இதே ஜூலை மாதத்தில், 35 ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள், மற்றும் அமெரிக்கா, கனடா ஆகியவற்றின் தலைவர்கள் ஆகியோர் 'ஐரோப்பாவில் பாதுகாப்புக்கும் கூட்டிணைவுக்குமான மாநாட்டின்'' இறுதி ஆவணத்தை ஒப்பமிடுவதற்காக ஹெல்சிங்கியில் ஒன்று கூடினார்கள் (CSCE) உலகப் போர்களுக்குப் பின்னரான காலப்பகுதியில், கருத்தியல் ரீதியாக மாறுபட்டு, தமக்கிடையே போட்டி போட்டுக் கொண்டிருந்த ஒழுங்கமைப்புகள், எவ்வாறு ஒன்றாக இயங்க முடியும் என்ற விடயம் தொடர்பாக பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முத்தாய்ப்பாக, அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணம் ஒப்பமிடப்பட்டது. இந்த ஆவணம் உலகப் போர்கள் முடிவுற்றதன் பின்னர், அதிவிசேடமாக இரண்டு ஜேர்மனிகளுக்கு இடையேயும் மற்றும் போலந்து, சோவியத் ஒன்றியம் போன்றவற்றுக்கும் இடையேயான நாடுகளின் எல்லைகள், செல்வாக்குச் செலுத்தும் அச்சுகள் ஆகியவற்றை வரையறை செய்வதாக அமைந்தது. ஐரோப்பா எப்படிப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதையும், அந்தப் பிரிவுகள் எவ்வாறு மேலாண்மை செய்யப்படும் என்பதையும் அந்த ஆவணம் உறுதிப்படுத்தியது.



அரை நூற்றாண்டு என்பது மிக நீண்ட காலம் தான். ஹெல்சிங்கி நிகழ்வுக்கு முன்னரான 50 ஆண்டுகளைக் கணக்கிட்டுப் பார்க்கும் போது, 1925ம் ஆண்டில் நாங்கள் வந்துநிற்கிறோம். இரண்டு உலகப் போர்களுக்கு இடையேயான அமைதியான காலமாக அந்தக் காலப்பகுதி அமைந்திருந்தது. அந்த நேரத்தில், சமூக ரீதியாக, பொருண்மிய ரீதியாக, கருத்தியல் ரீதியாக, இராணுவ ரீதியாக, மற்றும் தொழில்நுட்ப ரீதியாக முரண்பாடுகள் வளர்ந்துகொண்டிருந்த பொழுதிலும், உலகப் போர்கள் எல்லாம் முடிவடைந்துவிட்டன என்று சக்தி வாய்ந்த நாடுகள் கருதிக்கொண்டிருந்தன. இரண்டாவது உலகப் போர் வெடித்த பொழுது யாரும் கற்பனை செய்திருக்காத அழிவை அது ஏற்படுத்தியது. அந்தப் போரில் வெற்றியடைந்தவர்கள் அவ்வாறான அழிவு மீண்டும் ஏற்படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். அவ்வாறான உறுதிப்பாட்டிலிருந்து உருவாகியதே ஒரு புதிய பன்னாட்டு ஒழுங்கமைப்பாகும். பனிப்போர் காலத்து மோதல்கள், சிலவேளைகளில் மோசமான நிலைகளை எட்டிய பொழுதிலும், நாடுகள் தங்களைப் பொறுத்தவரையில் கட்டுப்பாட்டுடன் நடந்ததால், ஒரு உறுதியான அதிகாரச் சமநிலை ஐரோப்பாவுக்கு தேவையான பாதுகாப்பை வழங்கியது.

கடந்த 50 வருடங்களைப் பார்க்கும் போது, பன்னாட்டு ஒழுங்கில் ஆழமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இருப்பினும் அந்த மாற்றங்கள் மாறுபட்ட விதத்திலே தான் பார்க்கப்படுகின்றன. 1975ம் ஆண்டில் நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடிய பொழுது, யாருமே 1925ம் ஆண்டு காலப்பகுதிக்குரிய ஒழுங்கமைப்பை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அவை முற்றிலும் வேறுபட்ட யுகங்கள் என்ற கருத்தே மேலோங்கியிருந்தது, மாறாக, இன்று, ஹெல்சிங்கி உடன்படிக்கைகள், ஐரோப்பிய பாதுகாப்பின் அடித்தளமாகப் பார்க்கப்படுவதுடன் அங்கு பின்பற்றப்பட்ட கொள்கைகள் பன்னாட்டுக்கும் உரியவையாகப் பார்க்கப்படுகின்றன.



ஹெல்சிங்கியில் ஒப்பமிடப்பட்ட இறுதி ஆவணம் முன்னிறுத்திய கோட்பாடுகள் தொடர்பாக விவாதிக்க வேண்டிய தேவை இப்போது இல்லை. இறைமையை மதித்தல், வன்முறையைத் தவிர்ப்பதற்கான அர்ப்பணிப்பு, எல்லைகளைப் பேணுதல், ஒவ்வொரு நாடும் தங்களை விருத்திசெய்யும் பயணத்தில் ஒருவருக்கு ஒருவர் உதவுதல் போன்றவை அன்றைய கோட்பாடுகளாக இருந்தன. அந்த நேரத்தில் அளிக்கப்பட்ட இந்த வாக்குறுதிகள், நம்பத் தகுந்தவையாகவே இருந்தன. அதற்கான காரணம் என்னவென்றால் தொடர்ந்து நிலைத்து நிற்கக்கூடிய ஒரு அதிகாரச்சமநிலை அதனைத் தாங்கிக்கொண்டிருந்தது - பனிப்போர் காலத்துப் போட்டி இந்தச் சமநிலைக்கு உத்தரவாதமளித்தது. ஆனால் பனிப்போர் காலம் எப்போதோ

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்



# போர்க்களமாகும் செங்கடல்


## அணுவாயுதப் போருக்கு தயாராகும் ஐரோப்பா

வேல்ஸில் இருந்து **அருஸ்**

இஸ்ரேல் - ஈரான் போர் ஒரு தற்காலிக தணிவு நிலைக்கு வந்துள்ளபோதும், ஈரானுக்குள் ஊடுருவியுள்ள இஸ்ரேலிய மொசாட் அமைப்பினரின் தாக்குதல்களும், அதற்கு பதிலடியாக ஏமனின் குதீஸ் அமைப்பினர் மூலம் செங்கடலிலும், இஸ்ரேல் மீதும் ஈரான் மேற் கொண்டுவரும் தாக்குதல்களும் தொடர்கின்றன என்பதை விட வேகமாக அதிகரித்து வருகின்றன என்பதே யதார்த்தம்.




கடந்த ஞாயிற்றுக்கிழமை(6) ஆரம்பமாகிய குதீஸ் அமைப்பினரின் தாக்குதல்களில் தாம் 45 இற்கு மேறபட்ட கைப்பசொனிக் மற்றும் சாதாரண ஏவுகணைகளையும், பல ஆளில்லாத தாக்குதல் விமானங்களையும் பயன்படுத்தியதாக அன்சர்ரல்லா அமைப்பின் தலைவர் *Abdulmalik Houthi* தெரிவித்துள்ளார்.



லைபீரிய நாட்டு கொடியுடன் பயணித்த கிறீக் நாட்டில் பதிவு செய்யப்பட்ட *MV Magic Seas* என்ற கப்பலை கடந்த ஞாயிற்றுக்கிழமை(6) ஏமன் குதீஸ் அமைப்பினர் கடல் தாக்குதல் மூலம் தாக்கி மூழ்கடித்துள்ளனர். ஏவுகணை மற்றும் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மூலம் முதலில் தாக்குதல் நடத்திய *Houthis* அமைப்பினர். பின்னர் சிறிய படகுகளில் சென்று கப்பலை சுற்றிவளைத்து ஆர்பிஜி உந்துகணை செலுத்திகள் மற்றும் சிறிய ஆயுதங்கள் மூலம் தாக்கி கப்பலை மூழ்கடித்துள்ளனர். அதில் இருந்த பணியாளர்கள் வேறு ஒரு கப்பல் மூலம் மீட்கப்பட்டிருந்தனர்.



இதனிடையே கடந்த புதன்கிழமை(9) குதீஸ் அமைப்பினர் செங்கடலில் வைத்து லைபீரிய நாட்டு கொடியுடன் பயணித்த கிறீக் நாட்டில் பதிவு செய்யப்பட்ட மற்றுமொரு கப்பலையும் தாக்கி மூழ்கடித்துள்ளனர். இந்த தாக்குதலில் *Eternity C* என்ற கப்பலில் இருந்த 4 பணியாளர்கள் கொல்லப்பட்டதுடன், 15 பேர் காணாமல் போயுள்ளனர். 6 பணியாளர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். காணாமல்போனவர்கள் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என நம்பப் படுகின்றது.




கடத்திச் செல்லப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என அமெரிக்கா தெரிவித்தபோதும் குதீஸ் அமைப்பினர் அதற்கு பதில் எதனையும் இதுவரையில் வழங்கவில்லை. அவர்கள் வசம் 6 பணியாளர்கள் பிணைக்கைதிகளாக இருக்கலாம் என நம்பப் படுகின்றது.

இந்த இரண்டு கப்பல்களும் இஸ்ரேலின் துறைமுகத்தில் காணப்பட்டதால் வேறு நாடுகளில் போலியாக பதிவுசெய்யப்பட்டு துருக்கி ஊடாக இஸ்ரேலுக்கு தேவையான பொருட்களை ஏற்றிச் சென்றதாகவே கருதப்படுகின்றது. அதேசமயம் இஸ்ரேலுக்கு இரகசியமாக செல்லும் இந்த கப்பல்கள் குறித்த புலனாய்வுத் தகவல்களை ஈரானின் உளவுக் கப்பலே வழங்கிவருவதாக அமெரிக்கா முன்னர் குற்றம் சுமத்தியிருந்தது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தடைகளை தொடர்ந்து ரஸ்யாவும் வெவ்வேறு நாடுகளில் பதிவு செய்யப்பட்ட கப்பல்களை இரகசியமாக தனது எரிபொருள் வர்த்தகத்திற்கு பயன்படுத்தி வருவதுண்டு. ரஸ்ய நிறுவனங்கள் பயன்படுத்தும் எண்ணெய் தாங்கிக்கப்பல்கள் 600 ஆக இருந்தாலும் இரகசியமாக வேறு நிறுவனங்களின் பெயர்களில் ரஸ்யா பயன்படுத்தும் கப்பல்களின் எண்ணிக்கை 1500 ஆகும்.

அதேபோன்று இஸ்ரேல் தனது வர்த்தக தேவைகளுக்காக வேறு நாடுகளின் பெயர்களில் பயன்படுத்தும் கப்பல்களை புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் குதீஸ் அமைப்பு தாக்கி அழிக்கின்றதா என்ற கேள்விகள் எழுந்துள்ளன. மத்தியகிழக்கு பகுதியில் அமெரிக்காவின் இரண்டு விமானந்தாங்கி கப்பல்களான *USS Nimitz and USS Carl Vincen* ஆகியவை நிற்கின்றபோதும் குதீஸ் அமைப்பினரின் தாக்குதல்களை தடுக்க முடியவில்லை.

எனினும் இந்த தாக்குதல்களை தொடர்ந்து அமெரிக்காவின் *USS Carl Vincen* என்ற கப்பல் மத்தியகிழக்கில் இருந்து புறப்பட்டு செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.



2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் காசா மக்களுக்கு ஆதரவாக குதீஸ் அமைப்பினர் இஸ்ரேல் மற்றும் அதற்கு ஆதரவான நாடுகளின் கப்பல்களுக்குஎதிராகசெங்கடலில்தாக்குதல்களை ஆரம்பித்ததில் இருந்து கலக்ஸி லீடர் என்ற இஸ்ரேலிய கப்பல் கட்டத்தப்பட்டதுடன் சில கப்பல்கள் மூழ்கடிக்கபபட்டிருந்தன, சில கப்பல்கள் சேதமடைந்திருந்தன. செங்கடலின் ஊடான கப்பல் போக்குவரத்து கடுமையாக வீழ்ச்சி கண்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாக சுயஸ் கால்வாயின் ஊடான போக்குவரத்தும் வீழ்ச்சி கண்டிருந்தது. அது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் பங்காளியான எகிப்தின் பொருளாதாரத்திற்கு கடும் பாதிப்பை

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

### மலையக ... தொடர்ச்சி ...

இளைஞர்களின் ஆர்வமின்மை போன்ற பல காரணிகளும் கூத்துகள் போன்ற கலையம்சங்கள் அருகி வருவதற்கு ஏதுவாக அமைகின்றன. அத்துடன் அந்த மக்களின் வாழ்க்கைச்சுமைகளும் பொருளாதார பின்னடைவுகளும் தற்போது கூத்துகளில் செல்வாக்கு செலுத்துவதனை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாக ஆரம்ப காலங்களில் கூத்து பாடசாலைகளில் கூத்துகள் பயிற்றப்பட்ட போதிலும் தற்போது கூத்துகளை பயிற்றுவிப் பதற்கென ஏதேனும் நிறுவனங்கள் இருப்பதாக தெரியவில்லை. இருந்தும் கூட பல தலை முறைகள் கடந்தும் சில மாற்றங்களுடன் இக் கூத்துகள் இன்றும் இடம்பெறுகின்றன என்பது மிக வியப்பிற்குரியதே. உண்மையில் மலையக சமூகத்தில் ஒவ்வொரு பிரஜையும் இவைபோன்ற கலையம்சங்களை உள்வாங்கி இருக்கின்றனர். எதிர்கால மலையக சமூக உருவாக்கத்திற்கும் காமன்கூத்து முதலான கூத்துகள் ஒரு பெரும் பங்கு வகிக்கும் என்பது திண்ணம். இருப்பினும் அதற்கு கூத்துகளை எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதனை விரிவான ஆய்வுகளுக்கும் ஆழமான கருத்தாடல்களுக்கும் வாதபிரதிவாதங்களுக்கும் உட்படுத்துவதற்கு இடம்கொடுப்பதாக அமைய வேண்டும்.

#### காலத்தின் தேவை

தற்போதைய நவீன மயமாக்கலுடன் கைவிடப் படும் நிலையினை எட்டியுள்ள காமன்கூத்து உள்ளிட்ட கலையம்சங்கள் புனரமைப்பு செய் யப்பட்டு பேணி பாதுகாக்கப்படுவது காலத் தின் தேவையாகும். அவ்வாறான கூத்துகளை முழுமையாக தொகுத்து அவற்றுக்கு எழுத்துரு வாக்கம் கொடுக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். பிரதேச பாகுபாடின்றி கல்வி என்ற அடிப்படைகளில் மலையகத்திற்கான கல்விக் கூடங்களில் இதனை ஒரு கற்கை நெறியாக அறிமுகப்படுத்துதல் மற்றும் மாணவர்களுக்கு கட்டாய பாடநெறியாக மாற்றுதல் போன்ற செயற்பாடுகள் இவ்வாறான கூத்துகளை பாதுகாப்பதற்கு வழிவகுக்கும். இன்றும் மலையக பாடசாலைகளிலும் கல்வியியற் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கூத்து நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இவ் வாறான நிகழ்வுகள் வரவேற்கத்தக்கதே. அத்துடன் பாடசாலைகளில் நாட்டார் கூத்துகள் என்ற பாட விடயதானமும் உள்ளது. இருப்பினும் அவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன. மறுபுறம் வெறுமனே போட்டி நிகழ்ச்சியாகவும் பொழுதுபோக்கு அம்சமாகவும் கூத்துகளை பயன்படுத்தும் நிலை காணப்படுகிறது. இந்தநிலையில் கூத்து களை மாற்றி உயிரோட்டமுள்ள உளவியல் உணர்வாகவும் மலையக மக்களின் அடித் தளத்திற்கான ஆணிவேர் என்ற மனநிலை யினையும் தோற்றுவிக்க வேண்டும். இத்தகைய கூத்துகளில் புதைந்திருக்கும் பாரம்பரியமான கல்வி முறையினை அடையாளம் கண்டு அதுவே எமது பண்பாட்டு அடையாளங்களின் அடிப்படை என்ற உணர்வினை அடுத்த சந்ததி யினருக்கு கடத்த வேண்டியது இன்றியமையாத தேவையாகும்.

• • •

### ஒரு வாரத்தில் ... தொடர்ச்சி ...

படகுகளில் சென்று கப்பலை சுற்றிவளைத்து ஆர்பிஜி உந்துகணைச் செலுத்திகள் மற்றும் சிறிய ஆயுதங்கள் மூலம் தாக்கி கப்பலை மூழ்கடித்துள்ளனர்.

சீனாவில் இருந்து இரும்பு மற்றும் உரம் ஆகியவற்றை இந்த கப்பல் ஏற்றிக் கொண்டு துருக்கிக்கு சென்றதாக கூறப் படுகின்றது. எனினும் அது இஸ்ரேலின் துறைமுகத்திலும் காணப்பட்டதால் போலியாக பதிவுசெய்யப்பட்டு துருக்கி ஊடாக இஸ் ரேலுக்கு தேவையான பொருட்களை ஏற்றிச் சென்றதாகவே கருதப்படுகின்றது.

இந்த தாக்குதலில் 19 பணியாளர்கள் மீட் கப்பட்டுள்ளதாகவும் இருவர் காணாமல் போயுள்ளதாகவும், இருவர் காயமடைந்து ள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே கடந்த புதன்கிழமை(9) குதீஸ் அமைப்பினர் செங்கடலில் வைத்து லைபீரிய நாட்டு கொடியுடன் பயணித்த கிறீக் நாட்டில் பதிவு செய்யப்பட்ட மற்றுமொரு கப்பலையும் தாக்கி மூழ்கடித்துள்ளனர். இந்த தாக்குதலில் *Eternity C* என்ற கப்பலில் இருந்த 4 பணியாளர்கள் கொல்லப்பட்டதுடன், 15 பேர் காணாமல் போயுள்ளனர். 6 பணி யாளர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். காணாமல் போனவர்கள் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

### பாலஸ்தீனத்திற் . .. தொடர்ச்சி ...

மற்றும் அமெரிக்காவுக்கு எதிராக மேற்கொண்டு வருகின்றார். எமது நாடுகளின் தற்பாது காப்பு விடயத்தில் நாம் அவர்களுடன் நிற்போம். இனிமேலும் அவரின் நடவடிக்கைகளை பொறுக்க முடியாது என அமெரிக் காவின் வெளிவிவகாரச் செயலாளர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் மனித உரிமைகள் அலுவலகம் அல்பனீஸை காசாபகுதியின் பிரதிநிதியாக நியமித்திருந்தது. ஆனால் அவர் இஸ்ரேலுக்கு எதிராக செயல்படுகின்றார் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சுமத்தி யிருந்தார். கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இருந்து வெளியேறியிருந்தது.

காசாவில் இடம்பெறுவது ஒரு இன அழிப்பு என அல்பனீஸ் தொடர்ந்து குற்றம் சுமத்தி வருவதுடன், அனைத்துலக நீதிமன்றத்தின் பிடியாணைக்கு அமைவாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகுவை நாடுகள் கைது செய்யவேண்டும் எனவும் அவர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார். அனைத்துலக நீதி மன்றத்தின் நீதிபதிகள் மீதும் கடந்த மாதம் அமெரிக்கா தடைகளை அறிவித்திருந்தது.

### ஈரானின் ஏவுக ... தொடர்ச்சி ...

மீதான தடைகளை நீக்குமாறு நெத்தனியாகு அமெரிக்க அதிபரிடம் கேட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

இதனிடையே, இஸ்ரேலின் இராணுவ தளங்களுக்கும் மூலோபாய தளங்களுக்கும் என்ன நடந்தது என்பது மக்களுக்குப் புரியவில்லை என்பதை இஸ்ரேலிய ஊடகங்கள் விளக்கியுள்ளன.

என தெரிவித்துள்ள சியோனிஸ்ட் நங் கூரம் என்ற ஊடகம் இந்த தாக்குதல்களில் எவ்வளவு சேதம் மற்றும் அழிவு வெய்ஸ்மேன் நிறுவனத்திற்கு ஏற்பட்டது என்பது தொடர்பில் அந்த நிறுவனத்தின் தலைவரிடம் கேள்வி எழுப்பியிருந்தது.

அழிவு மிகவும் விரிவானது மேலும் முதற்கட்ட மதிப்பீடுகள் சேதத்தை 300 முதல் 500 மில்லியன் டொலர்கள் என்று கூறுகின்றன. இந்த நிறுவனம் ஒரு குடியிருப்புப் பகுதியையும் ஒரு அறிவியல் பகுதியையும் கொண்டுள்ளது ஆனால் அறிவியல் பகுதியே கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளது. என இந்த நிறுவனத்தின் தலைவர் பதிலளித்துள்ளார்.

எதிரிகள் மீண்டும் அதே பகுதிகளைத் தாக்க அனுமதிக்கும் தகவல்களைப் பெறுவதைத் தடுக்க தணிக்கை விதிக்கப்பட்டது என்று நான் நினைக்கிறேன். நிறுவனத்தின் மிக முக்கியமான அறிவியல் மையம் தாக்கப்பட்டது மிகவும் மோசமான பாதிப்பாகும், நாம் தற்போதும் சேதங்களை மதிப்பிட்டு வருகின்றோம். ஈரானியர்கள் தங்கள் ஏவுகணைகள் தாக்கிய தளங்களைக் கண்காணித்து வருகின்றனர் என்று சொல்ல வேண்டும்.

வெய்ஸ்மேன் நிறுவனம் மீது மட்டுமல்ல, இதுவரை அறிவிக்கப்படாத பல இராணுவ தளங்கள் மற்றும் பிற மூலோபாய மையங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதற்கான காரணம் அனைவருக்கும் தெளிவாகத் தெரியும். இருப்பினும், ஈரானிய தாக்குதல்கள் எவ்வளவு துல்லியமானவை மற்றும் பல தளங்களில் ஏற்பட்ட உண்மையான அழிவின் அளவு என்ன என்பதை பொதுமக்கள் இன்னும் புரிந்து கொள்ளாத ஒரு சூழ்நிலையை நாம் எதிர்கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித் துள்ளார். இஸ்ரேலிய ஊடகங்களின்படி, வெய்ஸ் மேன் நிறுவனம் மீதான ஈரானிய வான்வழித் தாக்குதலின் விளைவாக 113 கட்டடங்கள் சேதமடைந்தன என்பதைக் கவனத் தில் கொள்ள வேண்டும்.



## அணுவணுவாகச் ... தொடர்ச்சி ...

முடிவுக்கு வந்துவிட்டது. அதே நேரம் அந்த வாக்குறுதிகளுக்குப் பலம் தந்த கட்டுப்பாடுகளும் தளர்ந்துவிட்டன.

அமெரிக்காவையும் அதன் நட்பு நாடுகளையும் உற்றுநோக்குகின்ற பொழுது, 1975ம் ஆண்டுக்குரிய ஹெல்சிங்கி வடிவமைப்பு, சர்வாதிகாரப் போக்குடைய எதிரிகளுடன் தயக்கமான மனநிலையுடன் மேற்கொள்ளப்பட்ட விட்டுக்கொடுப்புகளாகவே பார்க்கப்பட்டன. சோசலிஷ கூட்டுத் தொகுதி சிதைந்து வீழ்ந்து 15 ஆண்டுகளுக்குப் பின்னர், சோவியத் ஒன்றியம் இல்லாதொழிந்த பொழுது, மேற்கு லக நாடுகளின் தலைவர்கள் வரலாற்று ரீதியாகத் தமது நிலைப்பாடுகள் சரியானவை என்று எண்ணினார்கள். ஹெல்சிங்கிக் கொள்கைகளை தாம் புரிந்துகொண்டது போலச் செயற்படுத்துவதற்கான அதிகாரம் தம்மிடம் இருப்பதாகவும் அவர்கள் எண்ணினார்கள் - இப்போது அவர்களை எதிர்ப்பதற்கு யாருமே இருக்கவில்லை. உலக ஒழுங்கை நிலைநிறுத்தும் முன்னைய உறுதிப்பாடுகள் இல்லாமற்போனது அவர்களுக்கு அச்சத்தைத் தரவில்லை மாறாக உற்சாகமூட்டுவதாகவே இருந்தது.

இன்று அந்த நிகழ்வின் 50 வருட நிறைவில், அந்தக் கொள்கைகள் எவ்வளவுக்குத் தற்போதைய சூழலுக்குப் பொருத்தமானவை என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும். தாராள உலக ஒழுங்கின் கட்டுகள் தளர்ந்துகொண்டிருக்கின்றன. அத்துடன் ஐரோப்பாவில் பாதுகாப்புக்கும் கூட்டிணைவுக்குமான மாநாட்டின் முடிவுகளை அமுல்படுத்தும் பொறுப்பை ஏற்ற ஐரோப்பாவில் பாதுகாப்புக்கும் கூட்டிணைவுக்குமான அமைப்பு, தனது இருப்பைத் தக்க வைக்கத் திண்டாடிக் கொண்டிருக்கின்றது.

1970ம் ஆண்டுகளில், எல்லோரும், உலகப் போரையே மையமாக வைத்துச் செயற்பட்டார்கள். அப்போது நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் உண்மையில் ஒரு சமநிலையை உருவாக்கவில்லை. அந்த சமநிலையை அவை பேணிப்பாதுகாத்தன. ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்களுக்கான எல்லைகள் எவை என்பது முன்னரேயே வரையறை செய்யப்பட்டிருந்தன. குறிப்பிட்ட மாநாட்டின் முடிவுகள் வெறுமனே அவற்றை இற்றைப்படுத்தியிருந்தன.

தெளிவான, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வெற்றியாளரோடு பனிப்போர் முடிவுக்கு வந்திருந்தால், ஒரு உறுதியான சட்டபூர்வத்தன்மை கொண்ட ஒரு கட்டமைப்பு உருவாகியிருக்கும். ஆனால் அதன் முடிவு முறையாக வரையறை செய்யப்படாததன் காரணத்தினால், மூலோபாய ரீதியான நிச்சயமற்ற தன்மை நீடித்தது. மேற்குலகம் வெற்றி பெற்றதாகவே எல்லோரும் ஊகித்தார்கள். ஆனால் அவ்விடயம் தொடர்பாக எந்தவொரு ஒப்பந்தமும் ஒப்பமிடப்படவில்லை. இவ்வாறான ஒரு நிலைப்பாட்டின் காரணமாக, எப்போதெல்லாம் அதிகாரச் சமநிலை மாற்றமடைந்ததோ அப்போதெல்லாம், ஒவ்வொரு சக்தியும் தாம் விரும்பியபடி, அந்த முடிவுகளை மறுபரிசீலனை செய்தன. குறுங்கால நன்மைகளை மட்டும் கருத்திற்கொண்டு, பலமான சக்தியான அமெரிக்கா, தானே உருவாக்கிய சட்டவிதிகளை அலட்சியம் செய்யத் தொடங்கிய பொழுது, அந்த ஒழுங்கமைப்பு மிக விரைவாகச் சீர்குலையத் தொடங்கியது.

பாதுகாப்புக்கும் கூட்டிணைவுக்குமான ஐரோப்பிய அமைப்பு, 1945 இல் உருவாக்கப்பட்டு, 1975 இல் உறுதிப்படுத்தப்பட்ட விதிமுறைகளையே இன்னும் கடைப்பிடித்துக்கொண்டுவருகிறது. ஆனால் அவ்வாறான ஒழுங்கமைப்பு தற்போது செல்லுபடியாகாது. பூகோளரீதியாக, கடந்தகால கட்டமைப்புகள் தொடர்பான கேள்விகளை எழுப்பி, இரண்டாம் உலகப் போரின் பின்னர் அடையப்பட்ட முடிவுகளை மீண்டும் பரிசீலனை செய்கின்றன. போருக்குப் பின்னரான ஐரோப்பிய உறுதித்தன்மையை அது தோற்கடிக்கிறது. சமகாலத்தில், தமது தெரிவுகளை மற்றவர்கள் மேல் திணிக்கும் ஆற்றலை தற்போது அது இழந்து விட்டது.

உக்ரேன் வேறு, இஸ்ரேல் வேறு. அதனால் தான் உலகத்திலே தனக்குரிய இடத்தை இதுவரை மீள்வரையறை செய்ய முடியாமல் அமெரிக்கா திண்டாடிக்கொண்டிருக்கிறது. அதே வேளை உலக அரசியலை நெறிப்படுத்தும் சக்தி என்ற நிலையை ஐரோப்பா ஏற்கனவே இழந்துவிட்டது. இதற்கு மாறாக யூறேசியா ஒரு முக்கிய இடமாகத் தற்போது மாறிக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்த மாற்றம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தச் செயற்பாடு இன்னும் முற்றுப்பெறவில்லை. மத்திய கிழக்கில் மிக முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அதே நேரம், ஆசியாவைப் பொறுத்தவரையில், பூகோள வளர்ச்சிக்கு வலுவூட்டும் அதே வேளை, அதன் கிழக்கு எல்லையிலிருந்து தெற்கு எல்லை வரையான பிரதேசம் கடுமையான போட்டிக்களமாக மாற்றமடைந்திருக்கிறது.

இவ்வாறான நேரங்களில், எல்லாம், பௌதீக மற்றும் அறநெறி எல்லைகள் உட்பட அனைத்தும் விரைவாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்றன. உலக ஒழுங்கு தொடர்பான குறிப்புப் புள்ளிகள் சமகாலத்தில் மிக விரைவாகவே மாற்றமடைந்துகொண்டிருக்கின்றன.

அப்படிப்பார்க்கும் பொழுது, ஹெல்சிங்கி மரபு அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டதா? என்ற கேள்வி எழுகிறது. அறியப்பட்ட மோதல்கள் மத்தியில், ஒரு கட்டமைப்பையும் எதிர்வுகூறும் தன்மையையும் வழங்கி, ஓர் உறுதித்தன்மையைப் பேணுவதே அதன் மைய இலக்காக இருந்தது. தற்கால உலகில் அவ்வாறான தொடர்ந்து நிலைக்கும் மோதல்கள் என்று எதுவுமில்லை. அப்படி ஒன்று விரைவில் உருவாகுவதற்கும் வாய்ப்பில்லை. காரணம் தற்போதைய நிகழ்வுகள் எதிர்வுகூறமுடியாதவை. அவை குழப்பம் மிகுந்தவை. நிலைமைகளைச் சீராக்குவதற்குரிய உறுதியான அதிகாரச் சமநிலை எதுவும் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை.

உதாரணமாக ஹெல்சிங்கி அணுகுமுறையை ஆசியாவில் பிரயோகிப்பது எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும். உலகமயமாக்கல், எதிரிகளின் நடுவில் கூடப் பெரும் சுதந்திரத்தை அங்கு உருவாக்கியிருக்கிறது. ஓர் அரசியல் இராணுவக் கட்டமைப்பை அங்கு பலவந்தமாகத் திணிப்பது, மோதல்களைத் தணிப்பதற்குப் பதிலாக அவற்றை இன்னும் மோசமாக்கும். மாற்றத்துக்கு இடம் கொடாமல் இருக்கும் சக்திகள் நடுவில், பொருண்மியமே முக்கிய தீர்மானிக்கும் சக்தியாக மாறும். பழைய உலக ஒழுங்கில் இவ்வாறான தவறு நிகழக்கூடிய சூழல் இருந்தது. அது மீள நிகழுமானால் ஆசியாவை அது கடுமையாகப் பாதிக்கும்.

இவை எப்படியிருப்பினும் ஹெல்சிங்கி உடன்பாட்டில் இருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் இன்னும் இருக்கின்றன. இராஜீகச் செயற்பாடுகள், அடிப்படைக் கொள்கைகளினால் வழிநடத்தப்பட்டன: சிக்கல் நிறைந்த ஈடுபாடுகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்தல், ஒருவரால் எல்லாவிடயங்களையும் சாத்தியமாக்க முடியாது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளல், குறைந்தளவு நம்பிக்கையையாவது பேணிப்பாதுகாத்தல், கருத்தியல் ரீதியிலான போட்டிகளுக்கு நடுவிலும் உங்கள் எதிரிகளுக்கு உரிய மரியாதையை வழங்குதல் போன்றவற்றை இங்கே குறிப்பிடலாம். வெளியில் பார்க்கும் பொழுது, இந்த அணுகுமுறைகள் தெளிவானவையாகத் தோன்றுகின்றன. ஆனால் பல பத்து ஆண்டுகளாக நீடித்த அறநெறி ரீதியிலான நிலைப்பாடுகளின் பின்னரும் வரலாற்றின் சரியான பக்கத்தைச் சேர்ந்திருப்பது தொடர்பான கதைகளுக்குப் பின்னரும், இந்த அணுகுமுறைகள் மீண்டும் ஒரு தடவை புரட்சிகரமானவையாக மாறிவிட்டன. ஒரு வேளை அடிப்படையான இராஜீக தத்துவங்களை நாங்கள் மீண்டும் ஒரு தடவை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. மிகவும் மோசமான அழிவுகளைத் தந்த உலகப் போர்களைச் சந்தித்த அனுபவங்களுக்குப் பின்னர், அமைதியை ஏற்படுத்தவேண்டும் என்ற உறுதிப்பாட்டைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட ஹெல்சிங்கி அனுபவம், மரியாதை, யதார்த்தபூர்வமான தன்மை, பேச்சுவார்த்தையினுள் நுழைவதற்கான ஆயத்தம், போன்ற பண்புகள் கற்பனை ரீதியிலான கருத்தியல் தூய்மையை விட அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை என்ற உண்மையை எமக்கு உணர்த்திநிற்கின்றன.

***நன்றி: rt.com***

## இலங்கையின்... தொடர்ச்சி ...

தந்துள்ளது.

50, மாணவர்களுக்கு குறைவான 56, பாடசாலைகளை மூடவுள்ளதாகவும் வடமாகாணத்தில் 13, கல்வி வலயத்தில் 981, பாடசாலைகளில் 2 இலட்சத்து 29, ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்பதாகவும் 451, பாடசாலைகளில் 100, க்கு குறைவான மாணவர்கள் கல்வி கற்பதாகவும். அதில் 265, பாடசாலைகளில் 50, க்கு குறைவான மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

***அந்த 265, பாடசாலைகளில்***

- ***யாழ்மாவட்டத்தில் 95***
- ***கிளிநொச்சி 20***
- ***மன்னார் 41***
- ***வவுனியா 72***
- ***முல்லைத்தீவு 37***

பாடசாலைகள் என குறிப்பிடப்பட்டுள்ளது இந்த சகல பாடசாலைகளும் தமிழ்ப்பாடசாலைகளாகும்.

இதேநிலைதான் கிழக்கில் தமிழ் பிரதேசங்களிலும் உள்ளது.

தமிழ்மக்கள் புலம்பெயர்வு ஐரோப்பிய நாடுகள், மத்தியகிழக்கு நாடுகளில் வேலைக்காக சென்றது மட்டும் காரணங்களை காட்டி இதனை சமாளிக்க முடியாது உண்மையில் தமிழ்மக்கள் ஏனைய இனங்களுடன் ஒப்பிடும்போது பிறப்பு இரு பிள்ளைகளுடன் பொருளாதாரம், வேலைப் பழுவை காரணம் காட்டி நிறுத்துவதும் இதற்கான அடிப்படைக்காரணம் என்பதும் உண்மை. எதிர்காலத்தில் இதற்கான திட்டம் என்ன என்பதை இப்போதே சிந்திக்க தவறினால் தமிழர்தாயகம் தமிழர் இல்லாத இடமாக மாறும்.

**** இலங்கைத் தமிழர்களின் அடையாளமானது, அவர்களின் மொழி, பண்பாடு, வரலாறு, நிலம் மற்றும் அரசியல் ஆகியவற்றின் அடிப்படையில், தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும்.***

**** அடையாள அழிப்பு முயற்சிகளை எதிர்த்துப் போராடுவதுடன், இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.***

**** புலம்பெயர்ந்த தமிழர்களும் தங்கள் அடையாளத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.***

• • •

**ஐக்கிய ... தொடர்ச்சி ...**

பதற்கு அந்த மக்களுக்கு அந்த நாட்டிலும் உரிமை இல்லை. இன்று அவர்களுக்காக குரல் கொடுக்கின்ற ஏனையவர்களுக்கும் இன்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

பாலஸ்தீன மக்களை நசுக்குகின்ற, அவர்களை என்னவும் செய்யலாம், அவர்களை குண்டு போட்டு கொல்லலாம்., பச்சை குழந்தைகளை கொல்லலாம். பெண்களைக் கொல்லலாம்.

இப்படி அந்த ஆக்கிரமிப்பாளருக்கு சாதகமாக இருக்கின்ற இந்த அமைப்பு முறை அதாவது, பாலஸ்தீனியர்களுக்கு அவர்களுடைய நாட்டிலே குரல் கொடுக்க முடியவில்லை. அதே நேரம் அவர்களுக்கு ஆதரவாக வெளிநாட்டிலும் குரல்கொடுக்க முடியவில்லை என்றால், நாங்கள் ஒரு விடயத்தை பார்க்க வேண்டும். ஏன் அந்த இஸ்ரேல் மக்கள் மீதுள்ள அனுதாபத்தினால் தான் இவர்கள் இந்த காரியத்தை செய்கிறார்கள் என்றால் அது அப்பட்டமான பொய்.

இஸ்ரேல் மக்களுக்கு உண்மையான பாதுகாப்பு எங்கே இருக்கிறது என்றால், அவர்களுடைய Iron Dome-மில் இல்லை. அமெரிக்காவுடைய ஆதரவிலில்லை. அவர்கள் அயலவர்களோடு ஒற்றுமையாக வாழ்வதில் தான் இருக்கிறது.

இஸ்ரேலியர்கள் பாலஸ்தீனர்களுடைய நிலத்தை ஆக்கிரமித்து, இருக்கிறார்கள். ஆனாலும் ‘நீங்கள் இருங்கள், எங்களையும் இருக்க விடுங்கள்’ என்பதுதான் பாலஸ்தீனர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. அதையும் கொடுக்க மறுத்து ‘பக்கத்து நாடுகளை நாங்கள் ஆக்கிரமிப்போம், எங்கெங்கு நம்மவர்கள் வாழ்ந்தார்களோ அந்த இடமெல்லாம் எங்களுக்கு சொந்தம் என்று கூறி வாழ முடியாது.

ஆகவே இஸ்ரேலுக்கு ஆயுதம் தயாரிக்கின்ற ஆயுத தொழிற்சாலைகளை சரியாக குறி வைத்து போராட்டம் செய்தார்கள். அவர் கள் பிரயாணிகளுடைய விமானத்துக்கு வர்ணம் பூசவில்லை. அவர்கள் குண்டு போடுகின்றவிமானத்திற்கு தான் அவர்கள் வர்ணம் தீட்டினார்கள். இந்த செயலுக்குதடை விதித்தால் கொலைகாரனை நீ கொலைகாரன் என்று சொல்வது குற்றம் என்பது போல ஆகிவிடும்.

அதே நேரம் பிரித்தானியாவின் இந்த கபட நாடகத்தை நாங்கள் பார்க்கலாம். 2000 ஆண்டில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத சட்டத்துக்கு கீழ்தான் இந்த இரு அமைப்புக்களும் தடை செய்யப்பட்டிருக்கிறது. இவர்களுடைய செயல்பாடுகள் எதுவுமே பயங்கரவாத செயலுக்குள் வராது. ஏனென்றால் இதனை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு குழு கொண்டு வந்த ஒரு தீர்மானத்திலே கூறப்பட்டுள்ளவை என்னவென்றால், உடைமைகளுக்கு சேதம் விளைவிப்பது பயங்கரவாத செயலாக ஆகிவிட முடியாது. அது உயிர்களுக்கும் சேதம் ஏற்படுத்தி இருந்தால்தவிர என்று ஒரு சரத்து வருகிறது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் 1566ம்தீர்மானம் 2004ல் கொண்டு வரப்பட்டது. இந்த தீர்மானத்தை வலுவாக ஆதரித்த நாடு பிரித்தானியா, இன்று அதே பிரித்தானியா, அதாவது எந்த ஒரு போராட்டத்திலும் சில வேளை சில உடைமைகளுக்கு சேதம் ஏற்படத்தான் செய்யும். ஏனென்றால் மக்கள் கொதித்தெழும்போது என்ன செய்வார்கள் என்று சொல்ல முடியாது. போராட்டங்களை ஒழுங்கு செய்த அமைப்பை தடை செய்ய முடியாது. ஏனென்றால் எல்லோரையும் கட்டுக்கோப்பாக வைத்திருக்க முடியாது.(Royal Air Force (RAF)) என்ற அமைப்பு சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டது.

ராணியுடைய மாளிகைக்கு சென்று ராணியுடைய கொடும்பாவியை சவப்பெட்டியாக சுமந்து கொண்டு சென்றார்கள். அவர்களுடைய கேட்டைதிறக்கவிடாமல் அங்கே தமக்கு விலங்கிட்டுக் கொண்டு நிற்கிறார்கள். இந்த போராட்டத்தில் உயிர் சேதம் ஏற்படவில்லை என்பதனால் தான் அது ஒரு பயங்கரவாத தடை செயலாக கருதப்படவில்லை. ஆனால் தனிப்பட்ட யாராவது ஒரு சொத்துக்கு உடைமைகளுக்கு சேதம் ஏற்படுத்தினால் அவரைப் பிடித்து தண்டனை கொடுக்கலாம் அதுக்கு வேற சட்டம் இருக்கிறது. ஆனால் இந்த பயங்கரவாத தடை சட்டத்தை அதுக்குள்ளே கொண்டு வர முடியாது என்பது உலகறிந்த ஒரு உண்மை. அப்படியானால் இப்பொழுது இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் பாலஸ்தீனுக்கு ஆதரவாக அல்லது இந்த அரசாங்கத்துக்கு பிடிக்காத யாருக்காவது ஒரு எதிராக ஒரு வர்ணம் தீட்டினால் அதை தற்கொலை குண்டுதாரி ஒருவர் சென்று பாராளுமன்றத்தை தாக்கியது போல ஒரு பயங்கரவாத குற்றமாக பார்க்கப்படும்.

இது பாலஸ்தீனர்களுக்கு மாத்திரமல்ல சாதாரண போராட்டங்கள் அனைத்துக்குமே இது ஒரு ஆபத்தான அச்சுறுத்தல். இதற்கு எதிராக மக்கள் வெகுண்டெழுந்திருக்கிறார்கள். இப்பொழுது இந்த தடை சட்டத்திற்கு எதிராக குறித்த அமைப்பு நீதிமன்றம்போயிருக்கிறார்கள். அவசரமாக கூடிய நீதிமன்றம் தடை உத்தரவை பிறப்பிக்கவில்லை. ஆனால் 21 ஆம் திகதி மீண்டும் அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படும். அதனுடைய முடிவு எப்படி இருக்கும் என்று சொல்லி தெரியாது. ஆனால் பிரித்தானிய அரசாங்கத்துடைய கபட நாடகத்தை தான் நாங்கள் பார்க்கிறோம்.

• • •

**செம்மணி மனித ... தொடர்ச்சி ...**

நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்கையும், ஒன்று சேர்க்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரியுள்ள தாக எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்த கோரிக்கை உள்ளிட்ட மேலும் சில கோரிக்கைகளையும் ஜனாதிபதியிடம் முன் வைத்துள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். இதன்படி, சர்வதேச நிபுணர்களின் கண்காணிப்புடன் செம்மணியில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அகழ்வு பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் அறிக்கைகள் உள்ளிட்டவை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த காலங்களில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் நிலுவையில் உள்ள பரிசோதனைஅறிக்கைகள்இலங்கைக்குமீண்டும் கொண்டு வரப்பட வேண்டும். அதேநேரம் அகழ்வு பணிகளுக்கு தேவையான நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் தங்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

**செம்மணி இன .. . தொடர்ச்சி ...**

நீதிமன்றத்தில் இருக்கும் முடிவுறா வழக்குடன் தற்போதைய விசாரணைகள் இணைக்கப்பட்டு ஒரே குற்றவியல் நடவடிக்கையின் பகுதிகளாகக் கருதப்பட வேண்டியதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, ஏலவே அகழப்பட்டு கிளஸ்கோவில் பாதுகாக்கப்படும் எலும்புக்கூடுகள் பற்றிய விசாரணை அறிக்கைளைப் பெறுவதோடு அவற்றை மீண்டும் இலங்கைக்கு கொண்டுவந்து தற்போது அகழ்வில் கண்டறியப்பட்ட எலும்புக்கூடுகளுடன் ஒன்றிணைத்து உயர் பாதுகாப்பில் வைக்கப்பட்டு ஆய்வுகள் தொடரப்பட வேண்டும். மூன்றாவதாக, அகழ்வுப்பணிகள் சர்வதேச தரப்பில் முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்வதோடு, சர்வதேச சுயாதீன நிபுணர் ஒருவர் அல்லது குழுவினரின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நான்கவதாக, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கீழ் செயற்படுகின்ற சாட்சியங்களை திரட்டும் ‘இலங்கைப் பொறுப்புக்கூறல் செயற்றிட்டம்’ தொடர்ந்தும் செயற்படுவதில் நிதி நிலைமைகள் தாக்கம் செலுத்துகின்ற நிலையில் அதற்கான நிதியுதவிகளைப் பெறுவதற்கும், அச்செயற்றிட்டம் நீடிக்கப்படுவதையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இதில் புலம்பெயர் அமைப்புக்களுக்கு கணிசமான பங்குள்ளது.

ஐந்தாவதாக, அடுத்து மாரிகாலம் வரவுள்ளதால் அகழ்வுப்பணிகள் பாதிக்கப்படுவதோடு ஏலவே அகழப்பட்ட பகுதிகளும் பாதிப்படையலாம். ஆகவே உள்நாட்டு, வெளிநாட்டு சுயாதீன தொண்டர்களை உள்வாங்கி அகழ்வுப்பணிகளை வினைத்திறனாக விரைவுபடுத்தவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இதற்காக ஐ.நா.அமைப்புக்களை நாடுவது பொருத்தமானதாக இருக்கும்.

இத்தகைய யதார்த்த நிலைமைகளை நோக்கி தமிழ் தரப்புக்கள் பல்வேறு தளங்களில் ஒன்றிணைந்து பொதுவேலைத்திட்டத்துடன் பயணிப்பதன் ஊடாகவே செம்மணியில் நிகழ்ந்தேறியுள்ள இன அழிப்புக்கான ஆதாரங்கள் பாதுகாப்பாக உறுதிப்படுத்தப்படும். பொறுப்புக் கூறலுக்கான வலுவான அடையாளங்களாக அமையும்.

• • •



## செம்மணியின்... தொடர்ச்சி ...

வந்த அகழ்வுப் பணிகளின் போது காலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு முதலாம் கட்ட அகழ்வுப் பணிகளின் மூன்றாம் நாளில் மழை குறுக்கிட்டது போன்று ஏற்பட்டு விடலாம் எனும் கணிப்பின் அடிப்படையில் மழை பெய்தால் வெள்ள நீர் தேங்காமல் வழிந்து ஓடும் வகையிலே JCB இயந்திரம் மூலம் கான் வெட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது, அவ்வாறு JCB இயந்திரம் மூலமாக கான் வெட்டுகின்ற போது அகழப்பட்ட பகுதிகளிலும் கூட சில மனித எலும்பு கூடுகள் அடையாளம் காணப்பட்டதனால் அந்த கான் வெட்டும் பணி நிறுத்தப்பட்டதோடு அந்த இடங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அகழ்வுப் பணிகளுக்காகக் காத்திருக்கிறது.

26.06.2025 முதல் 10.07.2025 வரையான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான 15 நாட்கள் முடிவில் இதுவரை 65 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப் பட்டிருக்கின்றன, இவைகளில் பாதிக்கப்பட்ட தரப்பு அல்லது முறைப்பாட்டாளர் கள் சார்பாக சொல்லப்பட்ட பிரதேசங்களில் இருந்து 63 முழுமையான மண்டையோடுகள் சகிதமான எலும்பு கூட்டுத் தொகுதிகளும், பேராசிரியர் ராஜ் சோமதேவா அவர்களினால் சற்றலைட் மூலமாக அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் இருந்து இரண்டு முழுமையான மண்டையோடு சகிதமான எலும்புக் கூட்டுத் தொகுதிகள் உள்ளடங்கலாகவே இந்த 65 எலும்புக்கூட்டுத் தொகுதிகளும் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டு சட்ட வைத்திய அதிகாரிகள் மூலமாக நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறது. அத்து டன்அங்கு பெறப்பட்ட ஏனைய சான்றுப் பொருட்க ளும் நீதிமன்றக் கட்டுக்காவலுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பேராசிரியர் திரு.ராஜ் சோமதேவா அவர்களினால் யாழ் நீதிமன்றில் இந்த இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் தொடர்பான செயற்பாட்டு அறிக்கை தொடர்பிலான தகவல்களை வழங்கு மாறு கௌரவ நீதிமன்றினால் பணிக்கப்பட்டுள் ளது. அதேபோன்று மனித என்பு எச்சம் 25 மற்றும் பாடசாலைப் புத்தகப் பையுடன் அகழ்ந்து எடுக்கப்பட்ட வேறு பல சான்றுப் பொருட்களுடனும் எடுக்கப்பட்ட என்புகள் தொடர்பான மனித என்பு ஆய்வு தொடர்பிலான அறிக்கைகளையும் சட்ட வைத்தியர் திரு. பிரணவன் செல்லையா அவர்களினால் வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் தாக்கல் செய்யுமாறும் கட்டளை ஒன்று உள்ளது.

இதேவேளை அகழ்வுப் பிரதேசம் இலக்கம் இரண்டில் ஒரு இடத்தில் ஒரு பொலித்தின் பையில் கட்டி வைக்கப்பட்ட நிலையில் சில என்புக் குவியல்களும் காணப்பட்டுள்ளன என்பதும் குறிப் பிடத்தக்கது.

அதில் சிறிய மற்றும் பெரிய எலும்புகளும் காணப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக மன்றில் தோன்றும் சட்டத்தரணிகளால் நீதவா னின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு அந்த என்புகளும் ஆய்வுகள் செய்யப்பட்டு அதன் அறிக்கைகளும் மன்றிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் விண்ணப்பம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் கௌரவ நீதவான் அவர்கள் சட்ட வைத்திய அதிகாரி திரு செ.பிரணவன் தலைமையில் ஒரு குழு அமைத்து அது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கூறப் பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கான இரண்டாம் கட்டத்திற்கு மொத் தமாக 45 நாட்கள் தீர்மானிக்கப்பட்டு அந்த தீர் மானத்திற்கு அமைவாக நீதி அமைச்சினால் நிதி தொடர்பான விடயம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு நீதி அமைச்சால் கூறப்பட்ட நிதி முழுவதும் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற கணக்காய்வுப் பகுதிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 45 நாளில் முதல் கட்டமாக 15 நாட்கள் அகழ்வுப் பணிகள் காலை 07.30 முதல் இரவு சுமார் பத்து மணி வரையும் நீடிக்கும் வகையிலாக தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருந்தது.

இறுதி நாளில் (10.07.2025) பேராசிரியர் ராஜ் சோ மதேவா மற்றும் அவரது குழுவினர் டாக்டர் பிரணவன் செல்லையா மற்றும் பல சட்ட வைத்திய அதிகாரிகளும் தென்னிலங்கையைச் சேர்ந்த மேலும் ஆறு சட்ட வைத்திய அதிகாரிகள், தொல்லியல் துறை மாணவர்கள் 14 பேர் யாழ் வைத்திய பீட மாணவர்கள் மற்றும் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று பணியாளர்களும்,நிதிபதி, சட்டத்தரணிகள், வைத்தியர்கள், சட்ட வைத்திய அதிகாரிகள், காவல் துறையினர் பணியாளர்கள் அதிகாரிகள் தொல்லியல் துறையினர் பல்கலைக் கழக மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டு இடம்பெற்றிருந்தது.

இப்பணியில் ஈடுபட்ட இவர்களுக்கான ஓய்வும் தேவை என்ற அடிப்படையில் பத்தாம் திகதி (10.07.2025) முதல் 10 நாட்கள் ஓய்வு வழங்கப்பட்டு எதிர் வருகின்ற 21 ஆம் திகதி (21.07.2025) முதல் மீண்டும் அடுத்த கட்டப் பணிகள் ஆரம்பமாகும் என்பதோடு அதுவரையும் இந்த இடம் வழமை போன்று பாதுகாக்கப்பட்ட இடமாகப் பாதுகாக்கப்படுவதோடு ஏற்கனவே அங்கே பொருத்தப்பட்டிருக்கின்ற இரண்டு சிசிடிவி கேமராக்களுக்கு மேலதிகமாக இன்னும் இரண்டு சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு தொடர்ந்தும் கண்காணிப்பு பணிகள் இடம்பெறுவதோடு மீண்டும் அடுத்த கட்ட அகழ்வு பணிகள் தொடரும் என்று கூறப்பட்டிருக்கிறது.

• • •

## இஸ்ரேலின் ... தொடர்ச்சி ...

தொடர்பு கொண்ட 71,000 க்கும் மேற்பட்ட நபர்களின் முழு அடை யாள சுயவிவரங்கள் தன்னிடம் இருப்பதாக ஹண்டாலா நிறுவனம் கூறுகின்றது. பெயர்கள் மற்றும் தரவு இப்போது வகைப்படுத்தப்பட்டு, அட்டவணைப்படுத்தப்பட்டு, காப்பகப்படுத் தப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் விரைவில் வெளியிடப்படும் என அது அறிவித்துள்ளது.

ஊடகம் என்ற போர்வையில் மொசாட் இயக்கிய உளவு மற்றும் செல்வாக்கு நெட்வொர்க்கின் இருப்பை கையகப்படுத்தப் பட்ட ஆவணங்களின் பகுப்பாய்வு உறுதிப் படுத்துகிறது, இது "சுயாதீன பத்திரிகை" என்ற தவறான கொடியின் கீழ் செயற்பட்டுள்ளது என்று ஹண்டாலா தெரிவித்துள்ளது.

## காசாவில் தொடர் . .. தொடர்ச்சி ...

Al Jazeera ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. கொல்லப்பட்டவர்களில் அதிகாரிகளும் அடங்கு வதாகவும் மேலும் 3 படையினர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே கடந்த வியாழக்கிழமை(10) மீண்டும் காசாபகுதியில் இடம்பெற்ற தாக்குத லில் மற்றுமொரு இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள் ளது.

இதனிடையே, இந்த சம்பவம் குறித்து அமெரிக்காவின் வெள்ளைமாளிகையில் அரச தலைவர் Donald Trumpபுடன் இரவு போசனத்தில் அமர்ந்திருந்த இஸ்ரேலிய பிரதமரிடம் தெரி விக்கப்பட்டதாகவும், அவர் அதிக சினத்துடன் காணப்பட்டதாகவும் வெள்ளை மாளிகைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

## செம்மணி புதை .. . தொடர்ச்சி ...

படுகொலை-153 தமிழர்கள்.

11. 1997 மே13 முள்ளிவாய்க்கால் படுகொலை-155 தமிழர்கள்.

12. 1997 யூன்08 மாங்குலம் செல்வீச்சு படுகொலை-156 தமிழர்கள்.

13. 1997 யூலை05 பன்னங்கட்டி படுகொலை-158 தமிழர்கள்.

14. 1997யூலை15 அக்கிராசன் அரசினர் வைத்தியசாலை படுகொலை-159 தமிழர்கள்.

15. 1998பெப்ரவரி01 தம்பலகாமம் படுகொலை-162 தமிழர்.

16. 1998 மார்ச்26 பழைய வட்டக்கச்சி படுகொலை -163 தமிழர்கள்.

17. 1998 யூன்10 சுதந்திரபுரம் படுகொலை -165 தமிழர்கள்.

18. 1998 கிளிநொச்சி நகர் படுகொலை-142 தமிழர்கள்.

19. 1998 நவம்பர் 25 விசுவமடு படுகொலை -167 தமிழர்கள்.

20. 1998 டிசம்பர்02 சுண்டிக்குளம் படுகொலை-169 தமிழர்கள்.

21. 1999 செப்ரம்பர்15மந்துவில் படுகொலை-169 தமிழர்கள்.

22. 1999நவம்பர்03 பாலிநகர் படுகொலை -172 தமிழர்கள்.

23. 1999 நவம்பர்20 மன்னார் மடுதேவாலயம் படுகொலை- 173 தமிழர்கள்.

24. 2000 அக்கோடபர்25 பிந்துனு வெவ படுகொலை- 177 தமிழர்கள்.

25. 2000 டிசம்பர்11 மிருசுவில் படுகொலை -180 தமிழர்கள்.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சி 11 வருடங்கள் அதில் முக்கியமான 25 படுகொலைகள் அவரின் ஆட்சியி லேயே இடம்பெற்றது.

சந்திரிகாவின் ஆட்சிக்கு முன்பிருந்த ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்தன, ஆர். பிரேமதாஸ, டி வி.விஜயதுங்க, சந்திரிகாவின் ஆட்சியில் இருந்து கைமாறிய மகிந்தராசபக்ச, காலத்து இனப் படுகொலைகள் பற்றிய விபரம் இன்னும் ஒரு பதிவில் எதிர் பாருங்கள்.

தற்போது பேசும் பொருளாக மாறியு ள்ள யாழ்ப்பாணம் அரியாலை செம்மணி, சித்துபாத்தி இந்துமயானத்தில் தோண்டப்படும் புதைகுழிகளில் இருந்து இதுவரை சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என 40க்கு மேற்பட்ட தமிழர்களின் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.அவைகள் அனைத்தும் சந்திரிகா ஆட்சிக்காலத்தில் நடந் தவை என கூறப்படுவதால் அவருடைய ஆட்சிக் கால படுகொலைகள் மட்டும் அறிவதற்கான பதிவே இது.

இன்னும் எத்தனை எலும்பு கூடுகள் அங்கிருந்து எடுக்கப்படும் என்பதையும் பார்ப் போம்.

இனப்படுகொலை வரலாறுகளை இன் றைய இளைஞர்கள் அறியவேண்டும் என்பதற் காகவே இதனை பதிவிட்டேன்.

## அரசுகளுடனான ... தொடர்ச்சி ...

பூசை செய்து அலங்கரிக்கும்.

அது தன் இலக்கை அடைவதற்கு எதிரி களை வெற்றி கொள்வதையே மூல மந்திரமாய்க் கொண்டிருக்கும். " "வெற்றி."... "வெற்றி" ...." வெற்றி" இதுவே அதன் மூல உச்சாடனமும், ஒரே இலக்கும். அதிகாரத்தை உயர்ந்த நிலையில் வைத்துக் கொண்டு எதிரியை அணைத்து வெற்றி பெற வேண்டுமோ அவ்வாறு வெற்றி பெறுவது அதன் முதல் முயற்சி.

**தொடரும்...**

**போர்க்களமாகும் ... தொடர்ச்சி ...**

ஏற்படுத்தி வருகின்றது. 2024 ஆம் ஆண்டு 6 பில்லியன் டொலர்களை இழந்ததாக எகிப்தின் நிதி அமைச்சர் தெரிவித்திருந்தார். அதேசமயம், ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகத்திலும் அது கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேலின் கைபா துறைமுகத்திற்கு ஆசிய மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து செல்லும் பொருட்கள் செல்வதற்கு செங்கடலின் ஊடான பயணத்தை விட 3 மடங்கு காலம் எடுப்பதுடன் ஒரு மில்லியன் டொலர்கள் அதிக எரிபொருட்செலுவும் ஆகின்றது.

ஆபிரிக்காவைசுற்றிசெல்லும்கப்பல்களால் அதிக பொருட் செலவு ஏற்படுவதுடன் பொருட்க ளின்விலைஉயர்வும்தவிர்க்கமுடியாததுஆகின்றது. எனவே தான் அமெரிக்க அதிபர் ட்றம்ப் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் குதிஸ் அமைப்பிர் மீது ஒரு படை நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். அதனை தொடர்ந்து இஸ்ரேலும் வான் தாக்கு தலை மேற்கொண்டிருந்தது. இந்த நடவடிக் கைகளுக்கு உதவியாக பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகியவையும் இணைந்திருந்தன. ஆனால் குதிஸ் அமைப்பினரின் ஏவுகணைப் பலத்தை முறியடிக்க முடியவில்லை.

மறுவளமாக அமெரிக்கா தனது விமானந் தாங்கி கப்பல்களில் இருந்த 3 எப்-18 விமானங்களை இழந்திருந்தது. அதன் பின்னர் அமெரிக்கா இந்த நடவடிக்கையில் இருந்து பின்வாங்கியுள்ளது. ஆனால் தற்போது ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான போரில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகியவை தமது 3 இலக்குகளையும் எட்டவில்லை. அதாவது ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை, ஈரானின் அணுசக்திதிட்டத்தைநிறுத்தமுடியவில்லை, அதன் ஏவுகணைப் பலத்தை அழிக்க முடியவில்லை. அமெரிக்க - இஸ்ரேல் கூட்டணியின் இந்த பின்னடைவு குதிஸ் அமைப்பினருக்கு மேலும் பலம் சேர்த்துள்ளதாகவே பார்க்கப்படுகின்றது.


எனவே தான் ஒரு வாரத்திற்குள் அவர்கள் இரண்டு கப்பல்களை மூழ்கடித்துள்ளனர். அதாவது செங்கடல் ஒரு போர்க்களமாக மாறி வருகின்றது. ரஸ்யா மீது கடுமையான தடைகளை கொண்டுவரப்போவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ள அதேசமயம், 300 மில்லியன் டொலர்கள் ஆயுதங்களையும் உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகளில் ரஸ்யாவின் கடல் வழியான எரிபொருள் வர்த்தகம் தான் அதிகம் முடக்கப்படும் சாத்தியங்கள் உள்ளன. அதாவது பினாமிகள் பெயரில் இயங்கும் ரஸ்யாவின் நிழல் கப்பல் தொகுதி முடக்கப்படலாம். எனவே தான் அதனை முன்கூட்டியே அறிந்த ரஸ்யா, குதிஸ் அமைப்பின் ஊடாக செங்கடலில் இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிழல் கப்பல்களை முடக்க ஆரம்பித்துள்ளதோ என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

அதாவது போரை நிறுத்த விரும்புவதாக அமெரிக்கா தெரிவித்தாலும் அதனை நிறுத்த முடியாத ஒரு பொறிக்குள் நேட்டோ கூட்டமைப்பு மாட்டியுள்ளதாகவே தெரிகின்றது. அவர்கள் விரும்பினாலும் நிறுத்த முடியாத நிலைக்கு போர் சென்றுவிட்டது. ஒவ்வொரு வருடமும் புதிய களமுனைகள் திறக்கப்படுகின்றன. பல இடங்களில் வான் மற்றும் கடல் பாதைகள் முடக் கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நாடும் தமது படைபலத்தை அதிகரிப்பதையும், ஆயுத உற்பத்தியை அதிகரிப் பதையும் குறியாக கொண்டு செயற்படுகின்றன. இந்த வாரம் பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொண்ட பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோனின் பயணமும், ஐரோப்பாவின் இரு அணுவாயுத நாடுகளும் ரஸ்யாவுக்கு எதிரான அணுவாயுத பாவனையில் எவ்வாறு இணைந்து செயற்படுவது என்ற உடன்படிக்கையை ஆய்வு செய்யும் நோக்கமாக கொண்டது. அதேசமயம், சில மாதங்களில் அணுவாயுதங்களை தயாரிக்கும் நிலையை ஜேர்மனி எட்டிவிடும் என ஐ.நாவின் அணுசக்திப் பிரிவு தெரிவித்துள்ளது. அதாவது ஐரோப்பாஒருஅணுவாயுதப்போரைஎதிர்கொள்ள தயாராகின்றதா? என்ற கேள்விகளும் மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன.

• • •




**அபகரித்த ... தொடர்ச்சி ...**

2025.06.27ல் நடைபெற்ற மாவட்ட ஒருங்கி ணைப்பு குழு கூட்டத்தின் போதும் தீர்த்து வைப்பது தொடர்பாகவும் பேசவில்லை இதனை ஆராய்வதாகவும் கடந்த கால அரசாங்கம் குத்தகைக்கு வழங்கி இருக்கிறார்களா என காணி ஆணையாளரிடத்தில் விசாரிப்பதாக பிரதிய மைச்சர் அருண் ஹேம சந்திர கூறினார் என விவசாயி ஒருவர் மேலும் தெரிவித்தார்.

கடவானை அட்டவானை கோமரங்கட வெல பகுதியில் உள்ள காணிகள் விவசாய பூமிகள் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் விடுவிக்கின்றனர். எனவே ஜனாதிபதி நிறை வேற்றதிகாரம் கொண்டவராக முப்படைகளின் தளபதியாக உள்ளபோதும் முஸ்லீம் சமூகம் என்ற வகையில் தான் பழி வாங்கப்படுகின்றோமா தீர்வு இல்லா விட்டால் பாரிய போராட்டமொன்றை மீண்டும் முன்னெடுப்போம் எனவும் விவசாய அமைப்பின் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

எனவே அபகரிப்பு செய்த காணிகளை மக்களின் வாழ்வாதாரம் கருதி உரியவர்களுக்கு வழங்கவேண்டும். ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் அநுர அரசாங்கம் இதில் கரிசனை காட்ட வேண்டும். கடந்த காலங்களில் எதிர் கட்சியில் இருந்த போது ஆளும் அரசாங்கத்தை கடுமையாக சாடி விமர்சித்தனர். பாராளுமன்றத்தின் உள்ளும் வெளியிலும் போராட்டங்கள் மூல மாகவும் இந்தியாவுக்கு விற்காதே என பல கோசங்களை திருகோணமலையில் உள்ள சம்பூர் அனல் மின் நிலையம், எண்ணெய் தாங்கி தொடர்பிலும் இன்னும் பல திட்டங்களுக்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். ஆனால் தற்போது ஆட்சி பீடம் ஏறி ஆட்சியை கைப்பற்றியதும் இங்குள்ள ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனித்து விட்டனர். மக்களை ஏமாற்றியும் தலைமறைவாகிய நிலையிலும் உள்ளார்கள் எனவே முத்து நகர் விவசாய பூமியை உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

• • •

**காணி அபகரி ... தொடர்ச்சி ...**

மகாவலி வலயம் என்ற போர்வையில் உள் வாங்கப்பட்டு துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிலத்தை தென்பகுதி நிறுவனம் ஒன்றுக்கும், பெரும்பான்மை சிங்கள மக்க ளுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்







